பால வித்யா

தொகுதி 3 பகுதி

அக்டோபர் 193

188797

571



1933 ௨வது பதிப்பு. 1933

# "ஸ்ரீவித்யா"

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட்,

பிஸினஸ், பாபுலர் அண்டு

அபீஷியல்

# டைரிகள்

இந்த டைரிகள் உயர்ந்த வெண்மையான பேபரில்

பிரிண்டுசெய்து, மிகவும் நேர்த்தியான காலிகோவில்

பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன.

ஒருதரம் உபயோகித்தால் நன்கு விளங்கும்.

---

தென் இந்தியா முழுவதும் எல்லோராலும்

நன்கு மதிக்கப்பெற்றது.

தேவைக்கு காமதமன்னியில் ஆர்டர் செய்யவும்

பப்ளிஷர்ஸ் :—**ஸ்ரீவித்யா பிரஸ்,**

கும்பகோணம், (தென் இந்தியா)

# பால வித்யா

(மாதப் பத்திரிகை)

No. —
4 NOV 1932
188797

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு "



| | | |
|---|---|---|
| தொகுதி III | 1932ஸு அக்டோபர்மீ ஆங்கீரஸஸு ஐப்பசிமீ | பகுதி X |



## ஹாஸ்ய விநோதங்கள்.

—0—

(BY C. V. PICHAI).

**கடன் கொடுத்தவர் :**—என்ன செட்டியார்வாள்! ரொம்பநாளாச்சே. போன ஆவணி மாஸமே கொடுத்துவிடுவதாய்ச் சொன்னீர். இன்னமும் தாமதித்தால்—. அது கிடக்கட்டும்; இருப்பதை முதலில் எண்ணிக்கொடும். பாக்கி அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

**செட்டியார் :**—என்னய்யா! மார்கெட்டில் பிஸினஸ் ரொம்ப டல். வியாபாரமே கிடையாது. இதில் ஏகப்பட்ட விவகாரம். சரி; அடுத்த வாரம் அவசியமாய்—

**க. கொ. :**—என்ன? அப்படி சொன்னால்—

**செட்டியார் :**—வேண்டுமானால் கையிருப்பைப் பாரும். பையில் தம்படி கிடையாது. இருந்தால்தானே கொடுக்கலாம்.

**செட்டியாரின் வேலையாள் :**— ஆமாங்க சாமி. ஐந்து நிமிஷம் முன்னாடி வந்திருந்தாலும் கிடைத்திருக்கும். இப்பதாங்க நாணுவையர் உண்டியல் கடையில் பணத்தைப் போட்டுட்டுவரேன். இப்பொ வந்து தொந்தரவு செய்தால் எஜமான் என்ன செய்வார்?

* * * * *

ஸ்ரீநிவாஸாசாரியார் :—என் ஸ்வாமிகளே! ஆத்திலே என்ன உடம்பு?

ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் :—ஆத்திலேயா? அம்மா இவ்வளவு நாளாய் தம்பி தேசிகனிடம் இருந்தாள். நாளைக்கு புறப்பட்டுவருவதாய் லெட்டர் வந்திருக்கிறது. வேறு உடம்புக்கு என்னய்யா கவலை வேண்டும்? அதுதான் உடம்பு.

* * * * *

[illegible] :—சாவித்திரி! இப் படம் யாருடையது? ஆ! என்ன விகாரம்? [illegible]ம், பருத்த உடலும், தடித்த உதடும், சப்பை மூக்கும் [illegible]களும் கோரப் பார்வையும், ஐயோ! இவரைப் பார்க்கவே [illegible]க்கிறதே. யார் இது?

சாவித்திரீ :—இவரா? [illegible]வர்.

18879.7

* * *

மணியன் :—மிஸ்டர் செட்டியார்! நீர் சொல்வது அழகல்ல. உயர் குடும்பத்திற் பிறந்த நீர் தங்களுடைய இரு ஸகோதரர்களைப் போல நற்[illegible] தக்க கீர்த்தியும் அடைவதுதான் மேன்மை. கேவலமாய ஸ்திரீ லோலனாய்த் திரிவதும் துன்மார்க்கர்களுடன் சிநேகம் கொள்ளுவதும் கடைசியில் வீண் அபக்கியாதியை உண்டாக்கும். இது யார் வீடென்பதும் தாங்கள் ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறீரென்பதும் எனக்குத் தெரியும். ஆகையால் இனிமேலாயினும்—

செட்டியார் :—ஐய்! நிறுத்தும். யாரைப் பார்த்து அப்படி நினைத்தீர்? இது என் நண்பரின் வீடு. அவர் வெளியிற் சென்றிருப்பதால் கதவு தாளிடப்பட்டிருந்தாலும் பாதகமில்லை என எண்ணி (அவரை எதிர்பார்த்துக்கொண்டு) உட்கார்ந்திருக்கிறேன். அதனாலென்ன?

ஜெயம் :—(கதவைத் திறந்து) செட்டியாரே! இரும்; இரும்; உட்கார்ந்திரும். என் தங்கை பர்வதம் அப்படி என்ன உயர்ந்தவள்? நானென்ன தாழ்ந்தவள்? அவளுக்கு வாங்கிக் கொடுத்திருப்பது போல் மறுபடியும் போய் அந்த V. V. தனபால செட்டியார் கடையில் ஒரு ரங்கூன் வைரத் தோடு எனக்கும் வாங்கிக்கொண்டுவந்தால்தான் உள்ளே நுழையலாம். இல்லாவிடில் நாள் பத்தானாலும் உள்ளே வரக்கூடாது.

* * * * *



ஆகையால் அதுவரையில் காமாக்ஷி அவ் வீட்டிலேயே இருக்கத் தீர்மானித்தாள்.

காமாக்ஷி சிந்தனையிலாழ்ந்தவளாய் அவ்வீட்டு முன்கட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். "என்ன அநியாயம்? எல்லாம் கனவுபோலிருக்கிறதே. ஆனால் நான் செய்த காரியம் ஒன்றும் வெளிவராமலிருந்தது மிகவும் சந்தோஷப்படத்தக்கது. ஆமாம்; இந்த அடுத்த வீட்டுப் பிராமணன் (மூர்த்தி அய்யர்) போன இடம் தெரியவில்லையே. இருக்கட்டும்." என்று ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல் எழுந்து சமையலறைக்குச் சென்றாள்.

நிற்க, மூர்த்தி அய்யர் அதுவரையில் தன் வீட்டிற்கு வரவில்லை. ஆகவே காமாக்ஷி அவர் இன்னும் தன் வலையில் மாட்டிக்கொண்டிருக்கிறாரென்று நினைத்துவந்தாள். இன்னும் அவர் தன் குற்றத்தை நாகராஜனிடம் ஒப்புக்கொண்டதும் சீதாராமன் இறக்குமுன் அக் கடிதத்தை வாசித்தானென்பதும் அவளுக்குத் தெரியாதாகையால் தான் மகா சாமர்த்தியசாலியென்றே நம்பி, அவள் சந்தோஷித்துக் கொண்டிருக்கையில் இரண்டாங்கட்டில் யாரோ நடமாடும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டவளாய் அவ்விடத்தை நோக்கி நடந்தாள். அவள் தன் தந்தை சென்றதும் வாசற்கதவை ஜாக்கிரதையுடன் தாளிட்டுக்கொண்டாளாகையால் அவ்விதம் வீட்டிற்குள் மனிதர் நடமாடும் சப்தத்தைக் கேட்டதும் அவள் அடைந்த கலவரத்திற்களவில்லை. ஆனால் அங்கு சென்று பார்த்தபொழுது அது மூர்த்தி அய்யரே என்பதைக் கண்டதும் அவளுடைய முகம் மலர்ந்தது.

மங்களத்தை அன்று இரவு அவ்வீட்டிலிருந்து மூர்த்தி அய்யருடைய வீட்டிற்குக் கொண்டுபோகும்பொருட்டு திறக்கப்பட்ட (இரண்டாங்கட்டில் அவ்விரு வீடுகளுக்குமிடையிலிருந்த) அக்கதவை மறுபடியும்பூட்ட எல்லோருமே மறந்துவிட்டனர். ஆகவே, அக் கதவு அவ்வீட்டுப்பக்கம் திறந்தேயிருந்தது.

மூர்த்தி அய்யரைக் கண்டதும் மலர்ந்த காமாக்ஷியின் முகம் அவரை நன்றாய் உற்றுநோக்கியதும் சவம்போல் வெளுத்தது. ஏனெனில் அச்சமயம் மூர்த்தி அய்யருடைய முகத்தில் ஒருவித பயங்கரமான பார்வையும் தீர்மானமும் நன்கு புலப்பட்டன. அதைக் கண்டதும் காமாக்ஷி ஒன்றும் புரியாமல் திகைப்புற்று மரம்போல் நின்றாள். மூர்த்தி அய்யர்,

"அடியே! இப்பொழுது நான் உன்னுடன் ஸரஸ ஸல்லாபம் செய்யும்பொருட்டு இங்கு வரவில்லை என்பது உனக்கே தெரியும். நான் வந்ததற்குக் காரணம் என்னவென்பதையும் இதோ சொல்லிவிடுகிறேன். நீ இதுவரையில் இருவரைக் கொலைசெய்துவிட்டாய். முதலாவது மங்களம்; இரண்டாவது உன் புருஷன். ஆனால் நானும் அதில் உனக்கு சாதகமாயிருந்தேனென்று நீ சொல்லக்கூடும். வாஸ்தவம்; என் குற்றத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நான் செய்த குற்றத்திற்காக இதோ இன்றே தற்கொலை செய்துகொள்ள நிர்ணயித்துவிட்டேன். ஏனென்றால் என்னை உன் புருஷனும் அவருடைய தம்பியும் மன்னித்துவிட்டபோதிலும் என் மனதில் ஸமாதானமென்பதே ஏற்படவில்லை. தினந்தோறும் இரவில் நான் படும் கஷ்டம் தெய்வத்திற்குத்தான் தெரியும். ஆனால் நான்மட்டும் தற்கொலை செய்துகொள்ளுவதில் பிரயோஜனமில்லை. ஏனெனில் நீ உயிருடனிருக்கும்பக்ஷத்தில் இன்னும் பல குடும்பங்களை நீ அநியாயமாய் அழித்துவிடுவாயென்பது நிச்சயம். ஆகவே முதலில் நீ இறக்கவேண்டியது அவசியம்." என்றார்.

இதைக் கேட்டதும் காமாக்ஷி 'ஐயோ!' என்று வீரிட்டலறும்தருவாயிலிருந்தாள். ஆனால் அச்சமயம் மூர்த்தி அய்யர், ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவளுடைய வாயைப் பொத்தி,

"அடியே! நீ கூச்சலிடுவாயாகில் இதோ உடனே உன்னைக் கண்டம்துண்டமாய் வெட்டிவிடுவேன்." என்று



கூறியவண்ணம் தன் இடுப்பிலிருந்து ஒரு க்ஷவரக்கத்தியை எடுத்துக் காண்பித்தார்.

அக் கத்தியைக் கண்டதும் காமாக்ஷி மறுபடியும் கூச்சலிடமுயன்றாள். ஆனால் அவள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் அவளுடைய வாயிலிருந்து எவ்வித சப்தமும் வெளிக்கிளம்பவில்லை. உடனே தன் கண்களை இறுக மூடிக்கொண்டு அப்படியே தரையிலுட்கார்ந்துவிட்டாள்.

பிறகு, மூர்த்தி அய்யர், தன் சட்டைப்பையிலிருந்து ஒரு துண்டு கடிதத்தையும் பென்ஸிலையும் எடுத்து அவள் முன் வைத்து,

"அடியே! நான் சொல்லுவதுபோல் அக் கடிதத்தில் எழுது." என்று ஆக்ஞாபித்தார். காமாக்ஷி தன் கரங்களால் தன் முகத்தை மூடிக்கொண்டிருந்தாளாகையால், அவர், அவைகளை அம் முகத்திலிருந்து பலாத்காரமாய் எடுத்துவிட்டு, "அடி சண்டாளி! இப்பொழுது நான் எதற்கும் அஞ்சமாட்டேனென்பது உனக்கே தெரியும். சாகும்பொழுதாவது நல்ல பெயர் வாங்கிக்கொள். உடனே நான் சொல்லுவதுபோல் எழுது." என்று துரிதப்படுத்தவே, காமாக்ஷி மெல்லத் தன் கண்களைத் திறந்து, மறுபடியும் ஒருதரம் மூர்த்தி அய்யரை நோக்கினாள். அவருடைய வலதுகையிலிருந்த கத்தி பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தது. தான் இனி தப்புவது அசாத்தியமென்று நினைத்தவள்போல், தன் எதிரிலிருந்த பென்ஸிலைக் கையில் எடுத்துக்கொண்டு, மூர்த்தி அய்யர் சொல்ல, கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினாள்:—

என் தந்தை அவர்களுக்கு,

மஹா உத்தமபுருஷராகிய என் பர்த்தா இறந்த துக்கத்தை என்னால் சகிக்கமுடியவில்லை. ஆகையால் நான் தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்துவிட்டேன். காமாக்ஷி.

அவள் அக் கடிதத்தை எழுதி முடித்ததும், மூர்த்தி அய்யர், அதை வாங்கி மடித்து அவளுட்கார்ந்துகொண்டி

ருந்த இடத்திற்கெதிரில் வைத்துவிட்டு, சுவற்றில் மாட்டப்பட்டிருந்த சீதாராமனுடைய படங்களில் ஒன்றை எடுத்து அவளுடைய இடது கையில் கொடுத்தார். பிறகு தன் மற்றொரு சட்டைப்பையிலிருந்து ஒரு சிறிய சீஸாவை எடுத்து அதை அவளுடைய வலது கையில் கொடுத்துவிட்டு,

“அடியே! உன் கையிலிருக்கும் விஷ மருந்தை நீ உடனே குடிக்கவேண்டும். இல்லாவிட்டால் இக் கத்தியால் நான்—” என்று அவர் மேலே பேசுமுன் காமாக்ஷி தன் கையிலிருந்த மருந்தைக் குடித்துவிட்டாள்.

## அத்தியாயம் 6.

இவ்வத்தியாயத்தில் நாம் கூறப்போகும் சம்பவங்கள் நிகழ்ந்த வருஷம் 1928 என்பதையும் அவைகள் நடந்த இடம் கல்வி, வியாபாரம், நாகரீகம் முதலிய எல்லா விஷயங்களிலும் சென்னைபோன்ற பெரிய நகரங்களுடன் ஒப்பிடத்தக்க சுந்தரபுரி என்ற ஒரு பெரிய ஊரென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்பொழுது நாகராஜன் என்ன ஸ்திதியிலிருக்கிறான் என்பதை கவனிப்போம். காமாக்ஷி நாம் சொன்னவிதம் இறந்ததும் அவனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. சுவர்ணபுரியில் அநேகமாய் எல்லோரும் காமாக்ஷி வாஸ்தவத்தில் தன் புருஷன் இறந்த துக்கம் ஸகிக்கமுடியாமல் தற்கொலை செய்துகொண்டாளென்றே நம்பிவிட்டனர். ஆனால் காமாக்ஷியின் குணவிசேஷங்களை நன்றாய் அறிந்த நாகராஜன் அதில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்று வியப்புற்றான்.

நிற்க, இக் கதையின் ஆரம்பத்தில் நாம் நாகராஜனைப் பற்றி கூறியபொழுது அவன் அச்சமயம் சென்னையில் தன் மாமனார் கல்யாணராமய்யர் வீட்டிலிருந்துகொண்டு வக்கீல் பரீக்ஷைக்கு வாசித்துவந்தானென்று கூறியதை நம்



நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். தன் படிப்பு முடிந்ததும் இரண்டு மூன்று வருஷகாலம் தன் மாமனாரிடம் வக்கீல் உத்தியோகத்திற்குவேண்டிய தந்திரங்களையும் சாமார்த்தியத்தையும் கற்றுக்கொண்டான். அதன்முடிவில் கல்யாணராமய்யர் தான் இனி உத்தியோகம் செய்யவேண்டியது அவசியமில்லையென்று தான் பிறந்த ஊராகிய சுந்தரபுரம் வந்துசேரவே நாகராஜனும் அங்கு வந்து தன் உத்தியோகத்தைச் செய்யவாரம்பித்தான். சுபாவத்திலேயே அவன் நல்ல சாமர்த்தியசாலியாகையாலும் இன்னும் அத் தொழிலுக்குவேண்டிய தந்திரங்களை ஏற்கனவே நன்றாய்த் தெரிந்துகொண்டுவிட்டானாகையாலும் எல்லாம்போக அவனுக்குத் தெய்வானுக்கிரகமும் பரிபூரணமாயிருந்ததாலும் அவன் சுந்தரபுரி வந்த சில வருஷகாலத்திற்குள் அவ்வூரிலுள்ள இதர வக்கீல்மார்கள் பொறாமைகொள்ளத்தக்க கீர்த்தியையும் கௌரவத்தையும் சம்பாதித்துவிட்டான். ஒவ்வொரு மாதமும் அவனுடைய வருமானமும் அதிகரித்துக்கொண்டேவந்தது. ஆகவே தற்சமயம் அவன் சுந்தரபுரியில் வக்கீல் உத்தியோகத்தில் புலிகளென்று பெயர்வாங்கியிருந்த ஏழெட்டு வக்கீல்களில் ஒருவனாயிருந்தான். அவனுக்கு மாதந்தோறும் வருமானம் 2000 ரூபாய்க்குமேலிருக்கவேண்டுமென்று அவ்வூரில் அனைவரும் அபிப்பிராயப்பட்டனர். அதுவுமன்றி அவன் அவ்வூர் வந்துசேர்ந்த 5 வருஷகாலத்திற்குள் அவனுடைய மாமனார் கல்யாணராமய்யரும் அவருடைய சம்ஸாரமும் விண்ணுலகம் ஏகவே அவருடைய இரண்டு லக்ஷ ரூபாய் மதிப்புள்ள ஐவேஜியும் அவனுக்கு வந்துசேர்ந்தது. அவன் சென்னையிலிருந்து சுந்தரபுரி வருவதற்குள்ளாகவே அவனுடைய தாயார் மறித்துவிட்டாள்.

தற்சமயம் நாகராஜனுக்குக் கிட்டத்தட்ட 42 வயதிருக்குமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஆகவே இன்னும் நாம் அவனை நாகராஜனென்று அழைப்பது பிசகாகையால் இதுமுதற்கொண்டு அவனை நாகராஜய்யரென்று அழைப்போம்.

இதற்குள் சீதாராமனுடைய புதல்வன் கிட்டுவுக்கு சுமார் 23 வயதிருக்குமென்பதும் நம் நேயர்களறிந்தவிஷயம். நாகராஜய்யர் தன் தமயனிடம் வாக்களித்தபடி கிட்டுவைத் தன் புத்திரனென்றே மதித்து வளர்த்துவந்தார். கிட்டுவைப்பற்றி இக் கதையின் ஆரம்பத்தில் கூறும்பொழுது அவன் எல்லா விஷயங்களிலும் தன் தாயார் காமாக்ஷியைப்போலவே இருந்தானென்று சொன்னோம். எனவே அவன் சிறுவயதிலிருந்தே கட்டுக்கடங்காமலிருந்துவந்தான். ஆனாலும் நாகராஜய்யர் அவனைத் தன்னால் முடிந்தவரையில் நல்லமார்க்கத்திற்குக் கொண்டுவர முயன்றுவந்தார். கிட்டு மற்ற விஷயங்களில் எப்படியிருந்தபோதிலும் படிப்பில் நல்ல ஊக்கமும் சுருசுருப்புமுள்ளவனாயிருந்ததால் தன் 20வது வயதில் பி. ஏ. பரீக்ஷையில் தேறவே நாகராஜய்யர் அவனும் வக்கீல் பரீக்ஷைக்கு வாசிக்கப் பிரியப்பட்டார். ஆனால் கிட்டு தனக்கு மேலும் படிக்க இஷ்டமில்லையென்றும் உடனே தனக்கு ஏதாவது ஒரு உத்தியோகம் பார்த்துக்கொடுக்கும்படியும் சொல்லவே, நாகராஜய்யர் அவ்வூரிலுள்ள ஒரு கவர்ன்மெண்டு ஆபீஸில் 100 ரூ. சம்பளத்தில் அவனுக்கு ஒரு உத்தியோகம் செய்துவைத்ததுமன்றி அதே வருஷம் தன் நண்பர்களில் ஒருவருடைய புதல்வியை அவனுக்கு விவாஹம் செய்துவைத்தார். படிப்பு, அழகு, நற்குணங்கள் இவைகளில் மிகவும் சிறந்த கிட்டுவின் மனைவி தன் புருஷனிடம் வந்து ஒருவருஷகாலமிருக்கும் தன் மனைவி தன்னிடம் வந்ததும் கிட்டு தான் தனியாய்ப்போய்விடவேண்டுமென்று பிரியப்பட்டு தன் எண்ணத்தை நாகராஜய்யரிடம் ஜாடையாய் வெளியிட்டான். ஆனால் அவன் உத்தியோகமானதும் மேலும் கட்டுக்கடங்காமல் பணத்தைக் கண்டபடி வீண்விரயம் செய்வதையும் இன்னும் அவனுடைய சில கெட்ட நடவடிக்கைகளையும் அறிந்த நாகராஜய்யர் அவனைத் தன் கண்பார்வையிலேயே வைத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமென்று நினைத்து கிட்டுவுக்குப் பல புத்திமதிகளைச்சொல்லி தன்னிடமே வைத்துக்கொண்டுவிட்டார்.



ஆகவே கிட்டுவும் அவனுடைய மனைவியும் தற்சமயம் நாகராஜய்யருடன் இருந்துவந்தார்கள்.

நாகராஜய்யருக்குத் தற்சமயம் 16 வயதுள்ள ஒரு பெண்ணும் 7 வயதுள்ள ஒரு பிள்ளையுமுண்டு. பெண்களுக்கு 16 வயதிற்குள் விவாஹம் செய்துவைப்பது பிசகென்பது அவருடைய அபிப்பிராயமாகையால் அவ்வூரில் சிலர் கண்டபடி பேசியதையும் லக்ஷியம் செய்யாமல் அவர் தன் புதல்விக்கு இன்னும் விவாஹம் செய்துவைக்கவில்லை. நாகராஜய்யர் பிராமண ஜாதியில் அஷ்டஸஹஸ்ர வகுப்பைச் சேர்ந்தவர். சாதாரணமாகவே அவ் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் கையில் கொஞ்சம் பணமிருக்கும்பக்ஷத்தில் மிகவும் தான் என்ற அகம்பாவமும் இன்னும் கண்டோர் பிரமிக்கத்தக்க படாடோபமுமுண்டென்பது உலகமறிந்த விஷயம். ஆனால் அதைச் சேர்ந்த எல்லோரும் அப்படியே என்று நாம் நினைக்கவில்லை என்பதை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நம் நாகராஜய்யர் மற்ற எல்லாவிஷயங்களிலும் நிகரற்றவராயிருந்தபோதிலும் அவரிடம் அவ் வகுப்பிற்குரிய டாம்பீகமும் அகம்பாவமும் கொஞ்சம் உண்டென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவருடைய மோட்டார்களையும் குதிரை வண்டிகளையும் இன்னும் தற்கால நாகரீகத்தையொட்டி கட்டப்பட்டிருந்த மாளிகைபோன்ற அவருடைய வீட்டையும் கண்டு அவ்வூரில் பிரமிக்காதவர்கள் ஒருவருமில்லை.

இனி நம் கதையை கவனிப்போம். நாம் சொல்லும் தினம் இரவு 8 மணி இருக்கும். நாகராஜய்யர் தன் வீட்டு மாடியில் மிகவும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அறையில் ஒரு விலையுயர்ந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஒரு வர்த்தமானப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம் அவருடைய சம்ஸாரமும் அவருடைய புதல்வி சாரதாம்பாளும் அங்கு வரவே, நாகராஜய்யர், தன் கையிலிருந்த வர்த்தமான பத்திரிகையை பக்கத்திலிருந்த மேஜையின்மீதெறிந்துவிட்டு தன் புதல்வியை நோக்கி,

"அம்மா சாரதம்! வா. இப்படி பக்கத்தில் உட்கார்ந்துகொள். எனக்கு உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்." என்று அன்பொழுகும் குரலில் கூறவே, அப் பெண்மணி, சமீபத்தில் போடப்பட்டிருந்த ஒரு ரத்னகம்பளத்தில் உட்கார்ந்துகொண்டு,

"ஏன்? என்ன வேண்டும்?" என்று மரியாதையுடன் வினவினாள்.

அச்சமயம் நாம் சொன்ன நாகராஜய்யருடைய புதல்வன் அங்கு ஓடிவந்தான். அவனுக்கு 7 வயதிருக்குமென்று முன்னமேயே சொல்லிவிட்டோம். சுந்தரம் என்று பெயர் கொண்ட அச் சிறுவனுடைய முகத்தில் சுறுசுறுப்பும் விஷமமும் கலந்து விளங்கின. உள்ளே ஓடிவந்தவன் தரையில் உட்கார்ந்துகொண்டிருந்த தன தமக்கையின் தலைப் பின்னலை ஒருதரம் வெடுக்கென்று இழுத்துவிட்டு ஓரே தாவலாய்த் தாவி தன் தந்தையின் மடியில் உட்கார்ந்துகொண்டான். இதைக் கண்டதும் நாகராஜய்யருடைய சம்ஸாரம், தன் பர்த்தாவை நோக்கி,

"நீங்கள் இவனுக்கு ரொம்ப இடங்கொடுக்கிறீர்கள். இவன் வீட்டில் செய்யும் விஷமம் என்னால் ஸகிக்கமுடியவில்லை. புஸ்தகத்தைக் கையிலெடுக்கமாட்டேனென்கிறான்." என்று கூறவே, நாகராஜய்யர், புன்சிரிப்புடன் தன் பிள்ளையைத் தட்டிக்கொடுத்து,

"ஏண்டா போக்கிரிப் பயலே! இப்படி விஷமம் செய்யலாமா?" என்று வினவிவிட்டு அவனுடன் கொஞ்சவாரம்பித்தார்.

நாகராஜய்யருடைய சம்ஸாரத்தின் சரீரம் முழுமையும் வைரங்கள் பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தன. ஆனால் அவளுடைய பெண் சாரதத்தின் சரீரத்தில் சாதாரணமான சில நகைகள் மட்டும் காணப்பட்டனவேயொழிய வைரங்கள் ஒன்றாவது தென்படவில்லை. அதற்குக் காரணமென்னவென்பதைக் கவனிப்போம். வரவர நம் நாட்டுப் பெண்மணிகள், அந்நியநாட்டு மாதர்கள்



புஸ்தகரூபமாகவும் இன்னும் பலவிதங்களிலும் தங்களை நிந்தித்து ஏளனமாய்ப் பேசுவதைக் கண்டு, ரோஷங்கொண்டு தங்களுடைய முன்னேற்றத்தின்பொருட்டு மிகவும் ஊக்கத்துடன் உழைத்துவருவது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே, சுந்தரபுரியிலும் நன்றாய்ப்படித்த பெண்மணிகளில் பலர் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் எல்லோரும் தங்களுடைய தாய்நாட்டின் எளிய நிலைமையை நன்குணர்ந்தும், இன்னும், அத் தாய்நாட்டின்பொருட்டு, பாடுபட்டு உழைத்துவரும் மகான்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தும், தாங்கள் அனாவசியமாய் வைரநகைகளிலும் வெளிநாட்டிலிருந்து வரும் துணிகளிலும் பணத்தை வீண் விரயம் செய்வதில்லை என்றும், அப்படியே தங்களில் தனவந்தர்கள் வீட்டுப் பெண்மணிகள் இருப்பார்களானால் அவர்கள் தாங்கள் கைக்கொண்டிருக்கும் கார்யத்தைத் தங்களுடைய பெற்றோர்களுக்கு எடுத்துச்சொல்லி, அப் பெற்றோர்கள் தங்களுடைய நகைகளுக்காகவும் துணிமணிகளுக்காகவும் செலவழிக்கத் தயாராயிருக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு அதைத் தங்களுடைய முன்னேற்றத்தின்பொருட்டும் பொதுஜன நன்மையின்பொருட்டும் உபயோகப்படுத்துவதென்றும் தீர்மானித்திருந்தனர். அப் பெண்மணிகளின் ஊக்கத்தையும் புத்திவிசாலத்தையும் கண்டு அவ்வூரிலுள்ள பெரியமனிதர்கள் எல்லோரும், வியப்புற்று, அவர்களைப் புகழ்ந்து பேசியதுமன்றி, அவர்களுடைய சங்கம் மேலும் விருத்தியடைய தங்களால் முடிந்தவரை உதவிபுரிந்துவந்தனர்.

நாகராஜய்யருடைய புதல்வி சாரதாம்பாளும் அச் சங்கத்தைச் சேர்ந்தவளாகையால் தன் தாயார் எவ்வளவோ வற்புறுத்தியும் விலையுயர்ந்த நகைகளையும் கதரைத்தவிர வேறு துணிகளையும் தன்பொருட்டு உபயோகிக்க கண்டிப்பாய் மறுத்துவிட்டாள். இன்னும் வைரங்களும் பட்டுத்துணிகளும் அவளுக்கு அவசியமில்லாமல் இருந்தது. ஏனென்றால் அப் பெண்மணி காண்போர்

மயங்கத்தக்க ரூபலாவண்யம் வாய்ந்தவள். அதுவுமன்றி அவளுடைய முகத்தில் லெக்ஷ்மியும் ஸரஸ்வதியும் ஒன்று சேர்ந்து தாண்டவமாடிக்கொண்டிருந்தனர். அவளுடைய சரீரத்தின் வனப்பு வைரங்களின் உதவியையும் விலையுயர்ந்த துணிகளின் உதவியையும் சிறிதும எதிர்பார்க்கவில்லை. அவள் நன்றாய்ப் படித்திருந்தபோதிலும் தற்காலப் படிப்பின் பலனாய் சில பெண்களிடம் காணக்கூடிய ஒரு பயமற்றதனமும் திமிறும் சிறிதுமின்றி மிகவும் அடக்க ஒடுக்கமுள்ளவள்.

நிற்க, சாரதாம்பாளுடைய தாயார், தன் பெண்ணின் சமீபத்திலுட்கார்ந்துகொண்டு, அவளைக் கொஞ்சநேரம் உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். பிறகு, பரிஹாஸத்துடன்,

“ஏண்டி சாரதம்! இவ்வளவு தடிப்புடவையைக் கட்டிக்கொண்டு நீ எப்படி நடக்கிறாய்? அதைப் பார்த்தாலே எனக்கு பயமாயிருக்கிறதே.” என்றாள்.

சாரதம்:—அம்மா! என்னை தயவுசெய்து மன்னிக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட புடைவையை நீயும் கட்டிக்கொள்ளவேண்டுமென்று நான் உன்னை வற்புறுத்தவில்லை. ஆனால் இதற்காக என்னைப் பரிஹஸிக்காமல் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அப்படியே என் புடவையைப் பார்க்கவும் உனக்கு பயமாயிருந்தால், நான் நீ இருக்குமிடத்திற்கு வரவில்லை.

தாயார்:—ஆமாம்; அதுபோகட்டும். இப்படி இந்த 10ரூ. தோட்டையும் பீங்கான் வளைகளையும் எத்தனை நாள் நீ போட்டுக்கொண்டிருக்கமுடியும்? உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளலாமென்று வரும் பிள்ளைகள் இதைப் பார்த்தால் என்ன நினைத்துக்கொள்ளுவார்கள்?

சாரதம்:—ஆனால் என்னைப் பார்க்கவரும் பிள்ளைகள் என்னுடைய காதிலிருக்கும் தோட்டையும் கைகளிலிருக்கும் வளைகளையும்தான் கவனிப்பார்களோ? அம்மா! என் காதுகளில் கமலத்தோடும் கைகளில் வைர வளைகளும் இல்லையென்ற காரணத்தால் என்னை விவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படாதவர்கள் குசாலாய்ப் போகலாம். பெண்களுக்கு மிகவும் அவசியமென்ன என்பதை அறியாத மூடாத்மாக்களை விவாஹம் செய்துகொள்ள நான் தயாராயில்லை.



தாயார்:—ஓஹோ! அப்படியா? அடியே! நாம் ரொம்ப அழகாயிருக்கிறோம் என்ற தைர்யத்தினால் நீ இவ்வளவு அலக்ஷியமாய்ப் பேசுகிறாய்.

சாரதம்:—அம்மா! இதுவரையில் நான் என் அழகைக் கவனித்தவளல்ல. அப்படியே நான் அழகாயிருந்தபோதிலும் வருபவர்கள் என் அழகைக் கண்டு மயங்கி என்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுவார்கள் என்று நான் நம்பவில்லை.

தாயார்:—அப்படியானால் எதைத்தான் கண்டு உன்னை ஒருவன் விவாஹம் செய்துகொள்ளுவானென்று நினைக்கிறாய்?

சாரதம்:—அதை நான் எப்படி சொல்லமுடியும்? சரி; எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன். (என்று சொல்லிக்கொண்டே தன் இடத்தைவிட்டெழுந்து பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் சென்றாள்.)

சாரதம் சென்றதும், அவளுடைய தாயார், திரும்பி தன் பர்த்தாவை நோக்கி,

“ஆமாம்; இவளுக்கு இந்த வருஷமாவது விவாஹம் செய்துவைக்கப்போகிறீர்களோ இல்லையோ? இப்படி எத்தனை நாள் வைத்துக்கொண்டிருக்கமுடியும்?” என்று வினவ நாகராஜய்யர், புன்சிறிப்புடன்,

“இந்த வருஷம் கண்டிப்பாய் செய்துவைத்துவிடுகிறேன். நான் என்ன செய்வேன்? என்னால் முடிந்தவரையில் நானும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன். திருப்திகரமான பையன் அகப்படவில்லையே.” என்றார்.

மனைவி :—ஆமாம்; உங்களுடைய பெண்ணுக்காக பிரும்மன் ஒரு கோடீசுவரனை சிருஷ்டிக்கவேண்டும். அந்த கோடீசுவரன் மன்மதனே அவதாரமாகவும் இருக்கவேண்டும். அப்படியே ஒருவனிருந்தாலும் உங்கள் பெண் அவனும் கதர் வேஷ்டி கட்டிக்கொள்ளவேண்டுமென்று சொல்லுவாள். இதென்னமோ ஆச்சரியம். பெண்களுக்கு இவ்வளவு இடம்கொடுப்பவர்களை நான் பார்த்ததே இல்லை.

பர்த்தா :—அடியே! நீ வீண் வம்புசெய்வதில் பிரயோஜனமில்லை. இதில் குழந்தையின் இஷ்டத்தைத்தான் நான் முக்கியமாய்க் கவனிப்பேன். அவளுடைய புத்திசாலித்தனத்தையும் அழகையும் கண்ட எவனும் அவளை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுவானென்பது நிச்சயம். நீ இதுவரையில் அவளுடன் பேசிக்கொண்டிருந்ததை நானும் கவனித்துக்கொண்டிருந்தேன். இந்த வயதில் அவள் தனக்கு நகைகள் வேண்டாம் பட்டுப் புடவைகள் வேண்டாம் என்று இவ்வளவு விரக்தியுடன் இருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள். ஏண்டி! கதர்ப் புடவை கட்டிக்கொண்டால் இளப்பமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? பைத்தியமே! நீ இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் புடவை 100 ரூ. இருக்கும். உன் சரீரத்திலுள்ள நகைகள் 20000 ரூ. இருக்கும். ஆனால் பிரயோஜனமென்ன? உன்னால் உலகத்துக்குண்டான நன்மை கிஞ்சித்துமுண்டோ? அன்று நம் வீட்டு வேலைக்காரியின் குழந்தை கீழே விழுந்து காயம் பட்டதும் சாரதம் அதை எவ்வளவு அன்புடன் எடுத்து அதற்கு சிகிச்சை செய்தாள். நீ அக் குழந்தை பார்ப்பதற்கு அழகாயில்லையென்றும் ஏழையென்றும் உன் வீட்டிற்கு வரும்பொழுதெல்லாம் அழுகிறதென்றும் அதை இவ் வீட்டிற்குள் கொண்டுவரக்கூடாதென்றும் கட்டளையிட்டாய். அடியே! என் எதிரில் குழந்தையை நிந்தித்துப் பேசாதேயென்று நான்



உனக்குப் பலதரம் சொல்லியும் நீ அவளை அடிக்கடி பரிஹஸிக்கிறாய்.

மனைவி :—நான் அவளை என்ன சொல்லிவிட்டேன்? என்னமோ பிரமாதமாய்ப் பேசுகிறீர்களே. என்னால் உலகத்துக்கு நன்மையில்லையென்பது வாஸ்தவம். எனக்கு சங்கங்களில் சேர்ந்து பேசத் தெரியாது. ஆமாம்; என்னமோ உங்களுடைய அத்தான் ஒருவர் சுவர்ணபுரியில் வக்கீலாயிருக்கிறாரென்றும் அவருக்கு 22 வயதில் ஒரு பையனுண்டென்றும் சொன்னீர்களே. அந்தப் பையனைப் பார்க்கிறதுதானே?

பர்த்தா :—என் அத்தானுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவருடைய பிள்ளை சென்னையில் டாக்டர் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கிறான். இதோ இன்னும் 10 தினங்களில் அவனுடைய காலேஜ் மூடப்படுமாம். அநேகமாய் இன்னும் 15 தினங்களில் இங்கு வருவான்.

மனைவி :—ஆமாம்; அவர்களுக்கு சொத்து—?

பர்த்தா :—உனக்கு அதானே கவலை. சொத்தெல்லாம் எதேஷ்டமாயிருக்கிறது.

மனைவி:—சரி; இந்த வரனையாவது முடித்துவிடுங்கள். நாம் இன்னும் இவளை இப்படி விவாஹம் செய்யாமல் வைத்துக்கொண்டிருந்தால் பேச்சிற்கிடம்.

பர்த்தா :—அதைப்பற்றி நீ கவலைப்படாதே.

சற்றுநேரத்திற்கெல்லாம் அம் மாது தன் பிள்ளையை அழைத்துக்கொண்டு கீழே சென்றாள். அவள் போனதும் நாகராஜய்யர் பக்கத்தறையிலிருந்த தன் புதல்வி சாரதத்தை அழைக்க அம் மங்கை வெளியே வந்து மறுபடியும் அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். நாகராஜய்யர் கொஞ்சநேரம் அவளுடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தார். அதில் காணப்பட்ட கம்பீரத்தையும் பெருந்தன்மையையும் பார்க்கப் பார்க்க அவருடைய நேத்திரங்

களிலிருந்து ஆநந்த பாஷ்பம் சொரிந்தது. பிறகு தன்னுள் "ஹே பரமேசுவரா! என் குழந்தைக்கு நல்ல புருஷனைப் பார்த்துக்கொடுப்பது உன்னுடைய கடமை." என்று பிரார்த்தித்தார். அது முடிந்ததும் மறுபடியும் தன் புதல்வியை நோக்கி பிரியத்துடன்,

"அம்மா சாரதம்! இந்த வருஷம் எப்படியாவது உன் விவாஹத்தைச் செய்துவிடத் தீர்மானித்திருக்கிறேன்." என்றார்.

இதைக் கேட்டதும் அக் கட்டழகி நாணத்துடன் தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். நாகராஜய்யர், அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

"அம்மா! இதைப்பற்றி என்னுடன் பேச உனக்கு என்ன வெட்கம்? தாராளமாய் உன் மனதிலிருப்பதைச் சொன்னாலல்லவோ எனக்கு விஷயம் புரியும். இதோ பார்; இதுவரையில் நாலைந்து பையன்களை அழைத்துவந்து காண்பித்தேனே. அவர்களைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயமென்ன?" என்று வினவினார். ஆனால் சாரதம் உடனே விடையளிக்கவில்லை. இன்னும் தரையை நோக்கியவண்ணமிருந்தாள். நாகராஜய்யர், "சாரதம்! என்னுடன் பேச உனக்கு ஏன் இவ்வளவு வெட்கம்? ஒருக்கால் இவ்வளவு சிரமப்பட்டு நான் அழைத்துவந்த பையன்களையெல்லாம் நீ வேண்டாமென்று சொன்னால் நான் கோபிப்பேனென்று பயப்படுகிறாயோ? அசடே! மனதிலிருப்பதை விட்டுச் சொல்லு." என்று கூறவே, அப் பெண்மணி, மரியாதையுடனும் வணக்கத்துடனும்,

"அப்பா! இதில் நீங்கள் என்னுடைய அபிப்பிராயத்தையும் இஷ்டத்தையும் கவனிக்கவேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்கு என்மீது எவ்வளவு பிரியமுண்டென்பதையும் என் சந்தோஷத்தில் நீங்கள் எவ்வளவுதூரம் நாட்டமுள்ளவர்களென்பதையும் நான் அறியாதவளல்ல. ஆனால் நீங்கள் இவ்விதம் வற்புறுத்தும்பொழுது இதுவரையில் வந்து என்னைப்பார்த்த வாலிபர்களைப்பற்றி எனக்குள்ள



அபிப்பிராயத்தை நான் சொல்லிவிடுவதே நலம். அவர்களுடைய ஆடம்பரத்தைப் பார்த்ததுமே அவர்கள் ஒவ்வொருவரும் லக்ஷாதிபதிகள் வீட்டுப் பிள்ளைகளென்பதைத் தெரிந்துகொண்டேன். அவர்களுடைய நடவடிக்கைகளையும் வெளித் தோற்றத்தையும் நீங்கள் கவனித்திருப்பீர்களென்று நம்புகிறேன். அவர்கள் தங்களுடைய செல்வத்தையே முழுமையும் நம்புவதாய்த் தோன்றுகிறதேயொழிய தங்களுடைய சரீரத்தால் உழைத்து சம்பாதிக்கும் எண்ணம் கிஞ்சித்துமுடையவர்களாய்த் தோன்றவில்லை. இச் செல்வம் எவ்வளவு அநித்தியமென்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லுவது அதிகப்பிரஸங்கித்தனமாகும். அப்படியே அவர்களுடைய செல்வம் சாசுவதமாயிருந்தபோதிலும் அதை அவர்கள் நல்ல மார்க்கங்களில் செலவழிக்கமாட்டார்களென்பது அவர்களுடைய டாம்பீகத்திலிருந்தே வெளியாகிறது. அதுவுமன்றி அவர்கள் உலகில் கோடிக்கணக்கில் ஏழை ஜனங்கள் உண்ணவும் உணவின்றி கஷ்டப்படுவதை உணர்ந்ததாகவாவது அப்படியே உணர்ந்தபோதிலும் அவர்களுக்குத் தங்களுடைய செல்வத்தால் உதவிபுரியவேண்டுமென்ற தயாள சிந்தனை உள்ளவர்களாகவாவது காணப்படவேயில்லை. எல்லாம்போக, அவர்கள் என்னுடைய கதர்ப் புடவையைப் பார்த்ததும் பிரமித்துப் புன்முறுவல் செய்தது "இதென்ன பைத்தியம்!" என்று பரிஹஸித்ததுபோலிருந்ததேயொழிய அதைக் கண்டு எள்ளளவும் சந்தோஷித்ததாகத் தோன்றவில்லை. அதிலிருந்தே அவர்கள் நம் தாய்நாட்டின் விஷயத்தில் எவ்வளவு சிரத்தையுள்ளவர்களென்பது வெளியாயிற்று. இவ்விதம் தம் தாய்நாட்டின்பொருட்டு தாங்கள் செய்யவேண்டியதென்னவென்பதை உணரச் சக்தியற்று தங்களுடைய சுகபோகங்களிலேயே நாட்டமுள்ள வாலிபர்களைக் கேவலம் மிருகமென்று சொல்லவேண்டுமேயொழிய அவர்களை ஆண்பிள்ளைகளென்று கூறமுடியாது. அப்பா! மிகவும் எளிய குலத்திலுதித்தவராயிருந்தபோதிலும் இவ் விஷயத்தில் கொஞ்சம் ஊக்கமும் இன்னும் பணத்தாலில்லாவிட்டா

னும் தன் சரீரத்தாலாவது பிறர் கஷ்டப்படுங்கால் தன்னால் இயன்றவரையில் உதவிபுரியவேண்டுமென்ற பரோபகார சிந்தனையுமுடைய ஒருவருடன் கூடிவாழ நான் சம்மதிப்பேனேயொழிய என் அழகைக் கண்டும் உங்களுடைய செல்வத்தைக் கண்டும் மயங்கும் மூடாத்மாக்களைப் பார்க்கவும் எனக்கு இஷ்டமில்லை." என்றாள்.

சாரதம் மேலும் அரைமணி நேரம் தன் தந்தையுடன் பேசிவிட்டு கீழே சென்றாள். அங்கு கிட்டுவின் மனைவியைக் கண்டதும்,

"ஏண்டி மன்னி! இன்னும் நீ படுத்துக்கொள்ளவில்லையோ?" என்று வினவ, கிட்டுவின் மனைவி,

"அண்ணா (கிட்டு) வெளியில் போயிருக்கிறார். வாயேன். கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருப்போம்." என்று அழைக்கவே இருவரும் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் சென்றார்கள்.

கிட்டுவின் மனைவிக்கும் சுமார் 17 வயதிருக்கும். அவள் சாரதத்தைத் தன் ஸஹோதரியென்று மதித்து அவளிடம் அளவற்ற பிரியம் வைத்திருந்தாள். சாரதமும் அவளுடைய நற்குணங்களையும் பெருந்தன்மையையும் நன்குணர்ந்து பார்ப்போர் வியக்கத்தக்கவிதம் அவளை அன்புடன் நடத்திவந்தாள். அவ்விருவரும் அடிக்கடி தங்களுடைய மனதிலிருப்பதை தாராளமாய் வெளியிட்டுப் பேசும வழக்கமுண்டு. அவர்களைக் கண்ட நாத்திமார்களும் மதனிமார்களும் ஆச்சரியப்படாமலிருப்பதில்லை. கிட்டு எவ்வளவு முரட்டு சுபாவமுள்ளவனாயிருந்தபோதிலும் அவ் வீட்டிலுள்ள அனைவரும் அவனிடம் நாகராஜய்யர் முதல் பிள்ளைக்குரிய மரியாதையும் கௌரவமும் வைத்திருந்தனர். நாகராஜய்யருடைய சம்ஸாரமும் அவனைத் தன் புதல்வனென்றே மதித்து நடத்திவந்ததுமன்றி அவனுடைய மனைவியிடமும் அந்தரங்க விசுவாஸம் பாராட்டிவந்தாள். அப் பெண்மணியின் பெயர் (கிட்டுவின் மனைவி) பார்வதி என்பதை இதுவரையில் சொல்ல மறந்துவிட்டோம்.



பார்வதி தன் பர்த்தாவை நாகராஜய்யரும் அவருடைய சம்ஸாரமும் சிறுவயதிலிருந்து வளர்த்தவர்களென்பதை உணர்ந்து அவர்களிடம் மெச்சத்தக்கவிதம் நடந்துகொண்டாள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

நிற்க அவ்விருவரும் அவ்வறைக்குள் சென்று உட்கார்ந்துகொண்டதும் பார்வதி,

"சாரதம்! இதுவரையில் மாடியில் என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று வினவினாள்.

சாரதம் :—அப்பாவுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

பார்வதி:—எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள்?

சாரதம் :—(புன்முறுவல் செய்தவண்ணம்) வேறென்ன? கல்யாணம்தான்.

பார்வதி :—பேஷ்! அப்படியா? என்ன நடந்தது?

சாரதம் :—இந்த ஒருமாத காலத்திற்குள் அப்பா நாலைந்து பிள்ளைகளை அழைத்துவந்து காண்பித்தாரே. அதில் யாரை விவாஹம் செய்துகொள்ள எனக்கு இஷ்டமென்று கேட்டார்.

பார்வதி :—(ஆவலுடன்) நீ என்ன விடையளித்தாய்?

சாரதம் :—அதில் ஒருவரையும் விவாஹம் செய்துகொள்ள எனக்கு இஷ்டமில்லையென்று கூறிவிட்டேன்.

பார்வதி :—நீ அவ்விதம் விடையளித்திருப்பாயென்பது எனக்குத் தெரியும்.

சாரதம்:—(வியப்புற்று) என்னடி மன்னி! ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

பார்வதி :—(சிறித்துக்கொண்டே) இவர்கள் இப்படி ராஜ வேஷம்போல் நாளுக்கொரு பையனை அழைத்துவந்து காண்பிப்பது வீண்கார்யமென்பது எனக்கு வெகு நாளாய்த் தெரியும்.

சாரதம் :—மன்னி! நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லையே. நீ பேசுவதின் அர்த்தமென்ன?

பார்வதி :—(விளையாட்டாகத் தன் நாத்தியின் கன்னத்திலிடித்து) உனக்கு அர்த்தம் புரியவில்லையோ? சாரதம்! இப்படி பாசாங்கு செய்ய எங்கு கற்றுக்கொண்டாய்? உன்னை மயக்கிய மன்மதன் ஏற்கனவே ஒருவர் இருக்கிறாரென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். நான் உன்னைக் கவனிக்கவில்லையென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயோ?

சாரதம் :—(மேலும் வியப்புற்று) மன்னி! நீ இப்படி என்னைப் பரிஹஸிப்பாயென்று நான் நினைக்கவில்லை. நீ சொல்லும் மன்மதன் யார்?

பார்வதி :—அவர் யாரென்பதை நான் சொல்லவேண்டுமோ? சரி; சொல்லுகிறேன் கேள். அவர் நம் சுந்தரத்துக்கு (சாரதத்தின் தம்பி) வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்கும் வாத்தியாரேயொழிய வேறல்ல.

இதைக் கேட்டதும் சாரதத்துக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. அக் கட்டழகி உடனே நாணத்துடன் தன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டாள். அவள் வாயைத் திறந்து பார்வதி கூறியது வாஸ்தவமென்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவளுடைய முகம் "அடி மன்னி! நீ சொல்லுவது வாஸ்தவமே." என்று கூறுவதுபோலிருந்தது. தன் நாத்தி மௌனம் சாதிப்பதைக் கண்ட பார்வதி, அவளுடைய முகத்தைத் தன் அழகிய கரங்களால் பற்றி, மெல்லத் தூக்கி அதை உற்றுநோக்கியவண்ணம்,

"ஏன் சாரதம்! நான் சொன்னது சரியா இல்லையா? நீ என்னை ஏமாற்றமுடியாது." என்றாள்.

சாரதம் :—(லஜ்ஜையுடன்) வாஸ்தவமாயிருந்தபோதிலும் அதெப்படி சாத்தியம்?

பார்வதி :—ஏன்? சாத்தியமில்லாமற் போவானேன்? ஒருக்கால் அவர் ஏழையாயிருக்கலாம். ஆனால் அவர் நன்றாய்ப் படித்தவரென்பதை அவருடைய முகத்திலிருக்கும் திவ்ய தேஜஸே எடுத்துக் காட்டுகின்றது.



அவரும் நற்குலத்தில் உதித்தவரென்பதற்கு அதே முகத்திலிருக்கும் கம்பீரமும் பெருந்தன்மையுமே சாக்ஷி. இன்னும் ஆண் சிங்கங்களுக்கு வேண்டிய பௌருஷமும் இதர நற்குணங்களும் அவரிடம் பரிபூர்ணமாயுண்டென்பதை அவருடைய நடவடிக்கைகளிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். அவர் அழகில் மன்மதனில்லையென்பது வாஸ்தவமே. ஆனால் இதுவரையில் உன்னைப் பார்க்க வந்த குரங்குகளைக் காட்டிலும் அவர் எவ்வளவோ மேல். உனக்கு இன்னும் என்ன வேண்டும்?

சாரதம் :—பேஷ்! மன்னி! நீ வர்ணிப்பதைப் பார்த்தால் உனக்கு நாவல் எழுதத் தெரியும்போலிருக்கிறதே. ஆனால் நான் 'இதெப்படி சாத்தியம்?' என்று கேட்டதற்குக் காரணம் அவருக்கு என்னை விவாஹம் செய்துகொள்ள யோக்கியதை உண்டா இல்லையா என்பதை நான் சந்தேகித்தேன் என்பதல்ல. அவர் பரம ஏழையாயிருந்தபோதிலும் நான் இஷ்டப்படும்பக்ஷத்தில் அப்பா அதற்கு ஸம்மதிப்பாரென்பது நிச்சயம். ஆனால் அம்மா என்ன சொல்லுவாளோ? அவள் அவருடைய குலமென்ன? கோத்திரமென்ன? அவரும் அஷ்டஸகஸ்ரமா? இப்பேர்ப்பட்ட விஷயங்களையெல்லாம் விஜாரிப்பாள்.

பார்வதி :—அதைப்பற்றியும் நீ கவலைப்படவேண்டாம். அவரும் அஷ்டஸகஸ்ர வகுப்பைச் சேர்ந்தவரென்பதும் அவருடைய கோத்திரம் நம்முடைய கோத்திரமல்லவென்பதும் எனக்குத் தெரியும்.

சாரதம் :—(வியப்புற்று) ஏண்டி மன்னி! இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? பார்ப்பதற்கு பூனைபோலிருக்கும் நீ அபாரவேலை செய்திருக்கிறாயே.

பார்வதி :—நான் ஒன்றும் செய்யவில்லை. இதை நான் தற்செயலாய்த் தெரிந்துகொண்டேன். நம் வீட்டு சமையற்காரம்மாள் சுப்புப் பாட்டி மகா வம்புக்காரியென்

பது உனக்கே தெரியும். அவளுடைய தமக்கைக்கு 12 வயதில் ஒரு பெண் இருக்கிறாளாம். அதற்காக அவள் யாரைக் கண்டபோதிலும் அவர்களுடைய குல கோத்திரம் முதலிய விஷயங்களை விசாரிக்காமலிருப்பதில்லை. ஒருநாள் அவள் சுந்தரத்தின் வாத்தியாருடன் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது நானும் கேட்டுக்கொண்டிருந்தேன்.

சாரதம் கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தாள். அதைக் கண்ட பார்வதி,

“ஆமாம்; இதை உன் மனதில் வைத்துக்கொண்டு இருந்தால் மற்றவர்களுக்குத் தெரியும் வழியென்ன?” என்று வினவ, சாரதம்,

“நீ சொல்லுவது வாஸ்தவமே. ஆனால் எனக்கு இதை இப்பொழுது வெளியிடுவதாக உத்தேசமில்லை. ஆமாம்; மணி 12க்கு மேலாகிறதே. அண்ணா (கிட்டு) எங்கே?” என்று வினவினாள்.

இதைக் கேட்டதும் பார்வதியின் முகம் வாட்டமடைந்தது. அவள், விசனத்துடன்,

“சாரதம்! அதை ஏன் கேட்கிறாய்? அவர் செய்யும் சில காரியங்கள் எனக்குப் பிடிக்கவேயில்லை.—” என்று மேலே பேசத் தயங்கவே சாரதம், அன்புடன் அவளுடைய கரங்களைத் தன் கைகளில் வாரியெடுத்துக்கொண்டு,

“மன்னி! ஏன் தயங்குகிறாய்? ஒருக்கால் நீ சொல்லக் கூடியதை நான் தெரிந்துகொண்டு ஏதேனும் விஷமம் செய்வேனென்று பயப்படுகிறாயோ?” என்று வினவினாள்.

பார்வதி :—எனக்கு அந்த பயமில்லை. ஆனால் அதைப்பற்றி நாம் பேசுவதில் பிரயோஜனமென்னவென்று யோஜிக்கிறேன். சாரதம்! நானும் என் புருஷனும் உங்களுடன் இருக்கும்வரையில் எனக்கு பயமில்லை. ஒருக்கால் நாங்கள் தனியாய்ப் போகவேண்டியிருக்கும் பக்ஷத்தில் நான் என்ன செய்யப்போகிறேனென்பது எனக்குப் புரியவில்லை.



சாரதம் :—(வியப்புற்று) மன்னி! என்ன இது? நீங்கள் ஏன் தனியாய்ப் போகவேண்டும்? அண்ணாவையும் உன்னையும் அப்பா விடமாட்டாரென்பது நிச்சயம். ஆனால் அப்படியே நீங்கள் தனியாயப் போக நேரிட்டாலும் அதற்காக நீ கவலைப்படுவானேன்? அண்ணாவுக்கு 120 ரூ. சம்பளம். அதை வைத்துக்கொண்டு நீங்களிருவரும் எவ்வளவோ சுகமாயிருக்கலாமே.

பார்வதி :—சாரதம்! நடக்கும் விஷயங்களை நீ நன்றாய்க் கவனிக்கவில்லை. உன் அண்ணாவுக்கு 120 ரூ. சம்பளமென்பது வாஸ்தவம். நான் இவ் வீட்டிற்கு வந்து கிட்டத்தட்ட ஒருவருஷகாலமிருக்கும். இதுவரையில் அவர் ஆத்துச் செலவிற்காக ஒரு தம்படிகூடக் கொடுக்கவில்லையென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அப்படியானால் இதுவரையில் அவர் சம்பாதித்த பணம் எங்கே? எங்களுக்கு வேண்டிய துணிமணியெல்லாம் மாமனார் (நாகராஜய்யர்) வாங்கிக்கொடுத்துவிடுகிறார்.

சாரதம் :—ஒருக்கால் அண்ணா தான் சம்பாதிக்கும் பணத்தை பாங்கியில் போட்டுவைத்திருப்பான். இதற்காக நீ ஏன் இவ்வளவு கவலைப்படவேண்டும்?

பார்வதி :—அவர் பாங்கியில் காலணாகூடப் போடவில்லை. சாரதம்! இப்பவும் நான் பணத்திற்காக கவலைப்படவேயில்லை. அவர் அப் பணத்தைச் செலவழிக்கும் வழிகளைக் கண்டே நடுங்குகிறேன்.

சாரதம்:—வண்டி மன்னி! நீ சொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறதே. அப்படியானால் அண்ணா அப் பணத்தை என்ன செய்கிறான்?

பார்வதி :—சாரதம்! அவர் தான் சம்பாதிக்கும் பணத்தைச் செலவழிப்பதுமன்றி அவர் பலவிடங்களில் கடனும் வாங்குகிறாரென்பது எனக்குத் தெரியும். தினந்தோறும் மாமனார் சாப்பிட்டுவிட்டு மாடிக்குப் போனதும் அவர் வெளியே போய்விடுகிறார். பிறகு 12 மணிக்கு மேல் திரும்பிவருகிறார்.

இதைக் கேட்டதும் சாரதத்துக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. அவள், பிரமையுடன்;

“மன்னி! இது இதுவரையில் எனக்குத் தெரியாதே. ஆமாம்; அப்படி தினந்தோறும் அவன் எங்கு போகிறானென்பது உனக்குத் தெரியுமோ?” என்று வினவினாள்.

பார்வதி:—நன்றாய்த் தெரியும். பக்கத்திலிருக்கும் பால கிருஷ்ண செட்டியார் வீட்டில் ஒரு பிராமண பரிசாரகன் இருக்கிறான். அவனைப் பார்த்தாலே பரம அயோக்கியன்போலிருக்கிறது. உன் அண்ணாவும் அவனும் தினம் இரவில் ரங்காடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் உன் அண்ணா குறைந்தது 10 ரூ. தோற்காலிருப்பதில்லை. அவர் இன்னும் என்னென்ன செய்கிறாரோ பகவானுக்குத்தான் தெரியும்.

சாரதம்:—மன்னி! இது மிகவும் மோசமாயிருக்கிறதே. ஆமாம்; தினந்தோறும் அவன் எங்குபோகிறானென்று நீ கேட்டால் என்ன பதில் சொல்லுகிறான்?

பார்வதி:—உடனே கண்டபடி திட்டவாரம்பிக்கிறார். பிறகு இரண்டு மூன்று நாட்கள் வரையில் என்னுடன் பேசுவதேயில்லை.

சாரதம்:—அடடா! இதென்ன அநியாயம்? இருக்—

ஆனால் சாரதம் மேலே பேசுமுன் வெளியே தோட்டத்தில் யாரோ கனைக்கும் சப்தம் கேட்கவே, தன் பேச்சை அப்படியே நிறுத்திவிட்டாள். மறுநிமிஷம் மற்றொரு கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த கிட்டு, தன் தங்கையைக் கண்டதும் வியப்புற்று,

“ஏன் சாரதம்! இன்னும் படுத்துக்கொள்ளவில்லையோ?” என்று கேட்க, சாரதம்,

“இல்லை. மன்னி ஒண்டியாயிருந்ததால் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம்.” என்று விடையளித்தாள். உடனே கிட்டு,



“சரி. எனக்குத் தூக்கம் வருகிறது. போய்ப் படுத்துக்கொள்.” என்று கூறவே, அப் பெண்மணி போய் விட்டாள்.

உடனே கிட்டு, திரும்பி தன்னை உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்த தன் மனைவியைப் பார்த்து,

“அடியே! உன் பெட்டிச் சாவியைக் கொடு.” என்று அதிகாரத்துவனியில் கேட்கவே, பார்வதி அவன் கையிலிக்த பணத்தையெல்லாம் அதற்குள் ரங்காட்டத்தில் தோற்றுவிட்டு, மறுபடியும் தன்னிடமிருக்கும் பணத்தை எடுத்துப்போகும்பொருட்டு வந்திருக்கிறானென்பதை அறிந்துகொண்டு, சாவியை உடனே கொடுக்காமல் தயங்கவே, கிட்டு, கோபத்துடன், “சீச்சீ! அற்ப நாயே! உன் பணம் எனக்கு வேண்டாம்.” என்று சீறினான். பார்வதி, மிகவும் கெஞ்சிய குரலில்,

“பணத்தை வைத்துக்கொண்டு உங்களுக்குக் கொடுக்காமல் நான் என்ன செய்யப்போகிறேன்? ஆனால் இவ்வளவு அகாலத்தில் நீங்கள் மறுபடியும் வெளியே—” என்று அவள் மேலே பேசுமுன் கிட்டு, பயங்கரமாய்த் தன் பற்களைக் கடித்துக்கொண்டே,

“அடியே! உன் அதிகாரத்துக்கு நான் கட்டுப்பட வேண்டுமோ? சீச்சீ! நாயே! இஷ்டமிருந்தால் சாவியைக் கொடு. இல்லாவிட்டால் வாயை மூடிக்கொண்டிரு.” என்று அதட்டவே, அப் பெண்மணி தான் மேலும் தர்க்கிப்பது வீண் என்று உணர்ந்தவள்போல் தன் கழுத்திலிருந்த சாவியைக் கழட்டிக் கொடுத்தாள்.

## அத்தியாயம் 7.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து கிட்டத்தட்ட 15 தினங்கள் கழிந்து விட்டன.

சுவர்ணபுரியில் வக்கீலாயிருக்கும் தன் அத்தானுக்கு அவருடைய பிள்ளையை சுந்தரபுரிக்கு அனுப்பும்படி கடிதம் எழுதியிருப்பதாக நாகராஜய்யர் கூறியதை நம் நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். சாம்பசிவன் என்று பெயர்கொண்ட அவ் வாலிபன் நாகராஜய்யருடைய வீட்டிற்கு வந்து அதற்குள் மூன்று தினங்களாய்விட்டன. அவனைப் பார்த்ததுமே சாரதம் அவன் அதுவரையில் வந்து தன்னைப் பார்த்த வாலிபர்களைக் காட்டிலும் எவ்விதத்திலும் உயர்ந்தவனல்ல என்பதைக் கண்டுகொண்டாள். ஆனாலும், அவன் தன் தந்தையின் அத்தான்பிள்ளை என்பதை உத்தேசித்து, அவனை அலக்ஷியம் செய்யாமல், அவனிடம் மரியாதையுடனும் பிரியத்துடனுமிருந்துவந்தாள்.

உலகில் சில மூடாத்மாக்கள் தங்களைப் பார்க்கும் ஒவ்வொரு ஸ்திரீயும் தங்களுடைய அழகைக் கண்டு மயங்கிவிட்டதாக நினைத்து சந்தோஷித்து அப் பெண்மணியைக் காணும்பொழுதெல்லாம் பற்களைக் காட்டிக்கொண்டு நிற்பது வழக்கம். நம் சாம்பசிவனும் அவ்வினத்தைச்சேர்ந்தவனாகையால், சாரதம் தன்னிடம் பிரியத்துடனும் மரியாதையுடனுமிருப்பதைக் கண்டதும், அம் மங்கை தன்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்று நினைத்து நாம் சொன்ன மூடாத்மாக்கள் செய்யும் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். இரண்டுமணி நேரத்திற்கு ஒரு தரம் விதம் விதமாக தன்னைத்தானே சிங்காரித்துக்கொள்ளுவதும், அனாவசியமாய் சாரதத்தின் அறையின் வழியாய் அடிக்கடி போவதும், பக்கத்தில் ஒருவருமில்லையென்பதை அறிந்ததும் அவளுடன் பேசப் பிரயத்தனப்படுவதுமாய் இருந்தான். இதைக் கண்ட சாரதம், அவனை ஒரு பைத்தியம் என்றே நினைத்து, வரவர அவனைத் தன்னுள் வெறுக்கலானாள்.

நிற்க, கிட்டுவும் சாம்பசிவனும் சந்தித்த அதே நிமிஷம் ஒருவித நட்பு ஏற்பட்டு, அது வியக்கத்தக்கவிதம் விருத்தியடைந்து அதற்குள் அவ்விருவரும் மிகவும் தாராளமாய்ப் பழகவாரம்பித்துவிட்டார்கள்.



நாம் சொல்லும் தினம் மாலை 5மணி இருக்கும்.

அச்சமயம் சாம்பசிவனும் கிட்டுவும் அவ் வீட்டைச் சுற்றிலுமிருந்த அழகிய தோட்டத்தின் ஒரு பாகத்தில் உலாவியவண்ணம் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். நடுவில் சாம்பசிவன், கிட்டுவை நோக்கி,

"ஆமாம்; நான் இப்படி எத்தனைநாள் இங்கு உட்கார்ந்துகொண்டிருக்கமுடியும்?" என்று வினவினான்.

கிட்டு:—ஏன்? இங்கிருப்பதில் உனக்கு இஷ்டமில்லையோ?

சாம்ப:—இஷ்டமில்லாமலென்ன? ஆனாலும் இங்கென்ன காரியம்?

கிட்டு:—சரி. என் தங்கையைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயமென்ன?

சாம்ப:—கிட்டு! என் மனதிலிருப்பதை உன்னிடம் சொல்லுவதில் பிசகில்லையென்று நினைக்கிறேன்.

கிட்டு:—அதைப்பற்றி நீ பயப்படவேண்டாம். மனதிலிருப்பதை தாராளமாய்ச் சொல்லு.

சாம்ப:—அப்படியானால் சொல்லிவிடுகிறேன். எனக்கு உன் தங்கையை விவாஹம் செய்துகொள்ளுவதில் ஆக்ஷேபணையில்லை. அவளைப் பார்த்ததுமுதற்கொண்டு எனக்கு அவள் மயக்கமாகவேயிருக்கிறது. ஆனால் அவளுக்கு என்னை விவாஹம் செய்துகொள்ள இஷ்டமுண்டா இல்லையாவென்பது தெரியவேண்டும்.

கிட்டு:—ஆமாம்; உனக்கு என்ன தோன்றுகிறது?

சாம்ப:—அவள் என்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்றுதான் தோன்றுகிறது.

கிட்டு:—நீ உன் மனதிலிருப்பதைச் சொல்லிவிட்டதால் நானும் என் மனதிலிருப்பதைச் சொல்லிவிடுகிறேன். அவளை விவாஹம் செய்துகொள்ளுவது லேசான காரியமல்ல. ஏனென்றால் அவள் பணத்தையும் ஆடம்ப

ரத்தையும் கண்டு மயங்குகிறவளல்ல. இக் கல்யாண விஷயத்தில் அவளுடைய தந்தை அவளுடைய இஷ்டத்தைத்தான் முக்கியமாய்க் கவனிப்பார். எல்லாம் போக, எனக்கொரு சந்தேகமுண்டு.

சாம்ப:—என்ன? என்ன சந்தேகம்?

கிட்டு:—அவள் ஏற்கனவே ஒருவனைக் காதலித்திருக்கிறாளென்று தோன்றுகிறது.

சாம்ப:—யார் அது?

கிட்டு:—வா; காண்பிக்கிறேன். அநேகமாய் இவ்வேளையில் அவன் இத் தோட்டத்திலிருப்பான்.

சற்றுநேரத்திற்கெல்லாம் அவ்விருவரும் அத் தோட்டத்தின் மற்றொரு பாகத்திற்கு வந்துசேர்ந்தனர். அங்கு கோடைகாலத்தில் மாலைவேளைகளில் உட்கார்ந்துகொண்டு காற்றுவாங்கும்பொருட்டு அழகிய பந்தலொன்று போடப்பட்டிருந்தது. அதற்குள் சுமார் 22 வயதுள்ள ஒரு வாலிபன் நாகராஜய்யருடைய பிள்ளை சுந்தரத்திற்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தான். நீலகண்டன் எனப் பெயர்கொண்ட அவனைப் பார்த்ததுமே அன்று இரவு சாரதாம்பாளும் பார்வதியும் அவனைப்பற்றிப் பேசியபொழுது பார்வதி அவனை வர்ணித்தது அதிகமல்லவென்று தோன்றியது. அவனுடைய முகத்தில் ஒரு தீர்க்க கம்பீரமும் பார்ப்போர் வியக்கத்தக்க ஒரு வசீகரமும் நன்கு விளங்கின. அவன் கிட்டுவையும் சாம்பசிவனையும் கண்டதும் மரியாதையுடன் எழுந்து கொஞ்சநேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். அவனைப் பார்க்கப் பார்க்க சாம்பசிவனுடைய மனதில் ஒருவித பொறாமையும் கவலையும் தோன்றி அவனை வதைக்கலுற்றன. அவன் தன்னுள் "சாரதம் இவனைக் காதலிப்பது வாஸ்தவமானால் நான் அவளை விவாஹம் செய்துகொள்ளுவது முடியாத கார்யம்." என்று ஒப்புக்கொண்டான்.

நிற்க, கிட்டு எவ்வளவு முரடனாயிருந்தபோதிலும் அவனுக்கு நீலகண்டனிடம் அளவற்ற மரியாதையும் மதிப்பு



முண்டு சாரதம் அவனைக் காதலிக்கிறாளென்பதில் அவனுக்கு சந்தோஷமேயொழிய கிஞ்சித்தும் அதிருப்தியில்லை. ஆகவே அவன் நீலகண்டனைக் காணும்பொழுதெல்லாம் அவனுடன் 5 நிமிஷநேரமாவது பிரியத்துடன் பேசிவிட்டுப் போவது வழக்கம்.

சற்றுநேரத்திற்கெல்லாம் கிட்டு சாம்பசிவனையழைத்துக்கொண்டு சென்றதும் நீலகண்டன் மறுபடியும் தன் கார்யத்தைக் கவனிக்கலானான்.

கிட்டு, கொஞ்சதூரம் சென்றதும், சாம்பசிவனை நோக்கி, "இவனைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயமென்ன?" என்று வினவ, சாம்பசிவன், இறுமாப்புடன்,

"அபிப்பிராயமென்ன? இவன் மகா வேஷதாரியென்று தோன்றுகிறது. ஆமாம்; இவன் ஒருவன் இவ்விதம் கதர்த் துணியை உபயோகித்துவிட்டால் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வந்துவிடுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறானோ? அதிருக்கட்டும்; இவன் பரம ஏழைபோலிருக்கிறதே." என்றான்.

கிட்டு:—அது எனக்குத் தெரியாது. ஆனால் அவன் மகா யோக்கியனென்பதிலும் நன்றாய்ப் படித்தவனென்பதிலும் சந்தேகமேயில்லை. ஆமாம்; அவன் எழுதியிருக்கும் புஸ்தகங்களை நீ வாசித்ததில்லையோ? அவன் வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு எழுதுவதிலிருந்தே அவனுக்கு மாதந்தோறும் 50 ரூபாய்க்குமேல் வருமானமுண்டு.

சாம்ப:—அதுகிடக்கட்டும். அவனுக்கு என்ன உத்தியோகம்?

கிட்டு:—இப்பொழுது உத்தியோகம் ஒன்றுமில்லை, ஆனால் அவனுக்கு உத்தியோகம் அவசியமில்லை. ஏனென்றால் அவன் இவ்வூரில் பெரியமனிதர்களுடைய பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கிறான். அதிலிருந்து அவனுக்கு சுமார் 100 ரூ. கிடைக்கும். அடாடா! பிரஸங்கங்களில் அவன் பேசி நீ கேட்டதில்லையே?

சாம்ப:— ஆமாம்; அவன் எதுவரையில் வாசித்திருக்கிறான்.

கிட்டு:— பீ. ஏ. பரீக்ஷையில் தேறியிருக்கிறான்.

சாம்ப:— என்ன? அப்படியிருந்துமா உத்தியோகம் கிடைக்கவில்லை?

கிட்டு:— அவனுக்கு உத்தியோகம் கிடைக்காமலில்லை. அவன் இவ்வூருக்கு வந்து இரண்டுவருஷகாலமிருக்கும். அதில் கிட்டத்தட்ட ஒருவருஷம்வரையில் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்தான். ஆனால் அதற்குள் அப் பள்ளிக்கூடத்திலிருந்த பையன்கள் உபாத்யாயர்கள் எல்லோரையும் இக் கதர்த் துணியைத்தவிர வேறு அந்நியநாட்டுத் துணியை உபயோகிப்பதில்லையென்று தெய்வத்தின்மேல் ஆணையாய் சத்தியம்பண்ணும்படி செய்துவிட்டான். வரவர அதில் வாசித்துக்கொண்டிருந்த வாலிபர்களுக்கு நம் தாய்நாடு கூடியசீக்கிரம் முன்னேற்றமடையவேண்டுமென்ற அவாவும் அதற்காகப் பாடுபட்டு உழைக்கவேண்டியதே தங்களுடைய கடமை என்ற உணர்ச்சியும் அதிகரித்துக்கொண்டேவந்தது. அப் பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயர் ஒரு தொடைநடுங்கியாகையால் அவனை வைத்துக்கொள்ளுவது ஆபத்திற்கிடமென்று பயந்து அவனை நீக்கிவிட்டார். ஆனால் அதுவரையில் பொதுஜன நன்மைக்காக அவன் உழைத்துவந்ததையும் இன்னும் அவனுடைய நற்குணங்களையும் கவனித்துவந்த பல பெரியமனிதர்கள் அவ்விதம் அவன் அப் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கப்பட்டதை அறிந்ததும் அவனுக்கு உதவிபுரிய நான் நீ என்று முன்வந்தனர். அதன்பலனாகவே தற்சமயம் அவன் பல பெரியமனிதர் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கிறான். அவர்கள் ஒவ்வொருவரும் அவனுக்குத் தாராளமாய் பணம் கொடுக்கிறார்கள்.

சாம்ப:— (அலக்ஷியமாய்) இதென்ன பிரமாதம்? இக்காலத்தில் கதர்த் துணியைக் கட்டிக்கொள்ளுபவர்களுக்கும்



சுவராஜ்யத்தைப்பற்றி தடபுடலாய்ப் பேசுகிறவர்களுக்கும் இப்படித்தான் கொஞ்சகாலம் அதிர்ஷ்டமடிக்கிறது.

கிட்டு:— இதெல்லாம் வீண்பேச்சு. அவனுடைய சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் நமக்கில்லையென்ற காரணத்தால் நாம் அவனை இகழ்ந்து பேசுவது தர்மமில்லை. சிலசமயம் பெரியமனிதர்கள் அவனைப் புகழ்ந்து பேசுவதையும் அவன் எழுதிய புஸ்தகங்களாலும் அவன் செய்துவரும் இதர காரியங்களாலும் அவன் அடைந்திருக்கும் கீர்த்தியையும் கண்டு என்னால் பொறுமைப்படாமலிருக்கமுடியவில்லை. இவ்வூரில் நடக்கும் பிரஸங்கங்களில் அவன் பேசும் அழகையும் அதன்பலனாய் அங்கிருப்பவர்கள் உலகத்தையே மறந்து அசைவின்றி உட்கார்ந்துகொண்டிருப்பதையும் நீ பார்க்க நேரிட்டால் அவனுடைய மதிப்பை நீ அறிவாய். அதுவுமன்றி அவன் வாய்ப் பேச்சுடன்மட்டும் நிற்பதில்லை. ஏன்? ஒருசமயம் அவன் எவ்வளவு பரோபகார சிந்தனையுள்ளவனென்பதை நானே நேரில் பார்த்தேன்.

இப்பொழுது நீலகண்டனைக் கவனிப்போம். மகா முரடனாகிய கிட்டுவே அவனைப்பற்றி இவ்வளவுதூரம் சிலாகித்துப் பேசவேண்டுமானால் வாஸ்தவத்தில் அவனுடைய குணதிசயங்கள் எவ்வளவு மெச்சத்தக்கவையாயிருக்கவேண்டுமென்பதை நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். ஆகவே நம் சாரதாம்பாள் அவனை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்பட்டது மெச்சத்தக்கதே.

நீலகண்டன் தன் வழக்கப்படி சுந்தரத்திற்குப் பாடம் சொல்லிக்கொடுத்தானதும் அச் சிறுவனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றான். அச்சமயம் அதன் முதல் ஹாலில் மாட்டப்பட்டிருந்த சில பெரிய படங்களை சாரதம் தன் தாயார் செய்த மாலைகளால் அலங்கரித்துக்கொண்டிருந்தாள். அப் பெண்மணி சுந்திரமும் அவனுடைய உபாத்தியாயரும் அங்கு வரும் சப்தத்தைக் கேட்

டுத் திரும்பிப் பார்க்க நீலகண்டனைக் கண்டதும் தான் நின்றுகொண்டிருந்த நாற்காலியிலிருந்து கீழே இறங்கி அவ்வாலிபனைத் தன் கடைக்கண்ணால் நோக்கியவண்ணமிருந்தாள். நீலகண்டனும் சாரதமும் தாராளமாய்ப் பேசும்வழக்கமுண்டு. ஆனால் நீலகண்டன் அவளுடன் பிறர் முன்னிலையிலும் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்ப்போர் சிறிதும் சந்தேகிக்கவழியில்லாமலும் பேசுவதேயொழிய நம் சாப்பசிவனைப்போல் அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டு திருட்டுத்தனமாய்ப் பேசுவதில்லை. நீலகண்டன் அப் பெண்மணி தன்னை அவளுடைய ஸகோதரனென்றே நினைத்து தன்னுடன் அவ்வளவு பிரியத்துடனும் மரியாதையுடனும் பேசுகிறாளென்று நினைத்துவந்தானேயொழிய அவள் தன்னை விவாஹம் செய்துகொள்ளப் பிரியப்படுகிறாளென்பதை ஸ்வப்பனத்திலும் நினைத்தவனல்ல

நீலகண்டன் சாரதத்தைக் கண்டதும் தன் கையிலிருந்த ஒரு புஸ்தகத்தை பக்கத்திலிருந்த ஒரு மேஜையின் மீது வைத்து, "அம்மா! இதோ நீ கேட்ட புஸ்தகம்." என்று சொல்லவே, அப் பெண்மணி, புன்முறுவல் செய்தவண்ணம் அதை எடுத்துப் பார்த்துவிட்டு மரியாதையுடன்,

"இப் புஸ்தகம் எழுதியவரே 'சபேசன் அல்லது ஒரு கொலையின் மர்மம்' என்று மற்றொரு புஸ்தகமும் எழுதியிருக்கிறார். அதுவும் அகப்பட்டால் தயவுசெய்து கொண்டுவந்துகொடுங்கள்." என்றாள். நீலகண்டன்,

"ஆகட்டும். சரி; நான் போய்வருகிறேன்." என்று உத்திரவு பெற்றுக்கொண்டு மேலும் அங்கு அனாவசியமாய்த் தாமதிக்காமல் வெளியே போய்விட்டான். அவன் அவ் வீட்டிற்கெதிரில் சுமார் ½ பர்லாங்கு தூரமுள்ள தோட்டத்தைக் கடந்துசென்று கடைசியில் வீதிக்கு வந்தபொழுது அங்கு சமீபத்தில் ஒரு கிழவி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அது அவ் வீட்டு சமையற்காரி சுப்புப்பாட்டியேயொழிய வேறல்ல. அவள் அடிக்கடி நீலகண்டனுடன் பேசுவதுண்டு. ஆனால் அச்சமயம் அவள் நின்றுகொண்டிருந்த இடத்தில் இருள் சூழ்ந்துகொண்டி-



ருந்தாலும் இன்னும் அப் பாட்டியின் புடவை நிறமும் சரீரத்தின் நிறமும் அங்கிருந்த இருளுடன் மிகவும் ஒருமித்திருந்ததாலும் நீலகண்டன் முதலில் அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் அக் கிழவி, கொஞ்சம் முன் சென்று,

ஏண்டாப்பா நீலகண்டா! பார்க்காதுபோல் போகிறாயே ஆமாம்; இனிமேல் நீ என்னைக் கவனிப்பாயா?" என்று கூறவே, அவ் வாலிபன், வியப்புற்று,

"பாட்டி! நீங்கள் நின்றுகொண்டிருந்ததை நான் பார்க்கவில்லை. உங்களை கவனிக்காமலிருக்க எனக்கு அப்படி என்ன வந்துவிட்டது?" என்று மரியாதையுடன் வினவினான்.

பாட்டி:—அது தானே சீக்கிரம் வெளியாகும். சரி; சௌக்கியந்தானே?

நீல:—பெரியோர்களுடைய தயவினால் இதுவரையில் எனக்கொன்றும் குறைவில்லை. பிறகு ஈசன் செயல். ஆமாம்; நீங்கள் 'இனிமேல் நீ என்னைக் கவனிப்பாயா' என்று கேட்டதற்குக் காரணமென்ன?

பாட்டி:—காரணமில்லாமல் கேட்பேனா? (நாகராஜய்யருடைய வீட்டைக் காண்பித்து) நீ சீக்கிரம் இவ் வீட்டு மாப்பிள்ளையாகப்போகிறாய்.

இதைக் கேட்டதும் நீலகண்டனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. முதலில் அவன் சுப்புப்பாட்டி தன்னைப் பரிகசிக்கிறாள் என்று நினைத்தான்.

நீல:—பாட்டி! நீங்கள் என்னைப் பரிஹசிப்பீர்களென்று நான் நினைக்கவில்லை.

பாட்டி:—அப்பா! இது பரிஹாசமல்ல. சாரதம் உன்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்பது எனக்குத் தெரியும். நாகராஜய்யர் அவள் பிரியப்படும் பையனுக்குத்தான் அவளை விவாஹம் செய்து கொடுப்பாரென்பது நிச்சயம்.

நாகராஜய்யர் தன் பெண்ணை அவளிஷ்டப்படும் வாலிபனுக்குத்தான் விவாஹம் செய்துகொடுப்பாரென்பது நீலகண்டனுக்கும் தெரியும். ஆனால் சாரதம் தன்னை விவாஹம் செய்துகொள்ளப் பிரியப்படுகிறாளென்பதைக் கேட்டதும் அவன் தன் செவிகளையே நம்ப இஷ்டப்படாதவன் போல் காணப்பட்டான்.

நீல :—பாட்டி! இது நம்பத்தக்கதாயில்லையே? எனக்கும் அவர்களுக்கும் எவ்வளவுதூரமென்பது உங்களுக்கே தெரியும். அதிருக்கட்டும்; அப் பெண்மணி என்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்பதை நீங்கள் அறிந்தவிதம் என்ன?

பாட்டி :—நான் பத்துப் பதினைந்து நாளுக்குமுன் ஒருநாள் இரவு அவளுக்குப் பால் எடுத்துக்கொண்டு அவளுடைய அறைக்குப் போனேன். ஆனால் அவள் அதிவில்லாததால் ஒருக்கால் தன் மன்னியுடன் (பார்வதி) பேசிக்கொண்டிருப்பாளென்று நினைத்து பார்வதியின் அறைக்குப் போனபொழுது அங்கு அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் மறைவிலிருந்து அவர்கள் பேசியதை உற்றுக்கேட்டேன். அதிலிருந்து சாரதம் உன்னை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்பதைத் தெரிந்துகொண்டேன். சரி; நாழியாய்விட்டது. இதை உன்னுடன் சொல்லுவதற்காகத்தான் இங்கு காத்துக்கொண்டிருந்தேன். (என்று சொல்லிக்கொண்டே நாகராஜய்யருடைய வீட்டைநோக்கி நடந்தாள்.)

அவள் சென்றதும் நீலகண்டன் கொஞ்சநேரம் அப்படியே பிரமித்து நின்றுகொண்டிருந்தான். ஆனாலும் எக்காரணத்தாலோ அச்சமயம் அவன் உள்ளத்தில் ஒருவித பேரானந்தம் பொங்கிவழிந்தது. அதுவுமன்றி சாரதத்தின் நற்குணங்களை அவன் நன்கறிந்தவனாகையால் தெய்வானுக்கிரகத்தினால் தான் அவளை அடையும் பாக்கியம் தனக்குக் கிட்டினால் தன்னைப்போன்ற அதிர்ஷ்டசாலி ஒருவனும் இருக்கமுடியாதென்று நினைத்தான். இவ்விதம் சிந்தித்தவண்ணம் அவ்விடத்தைவிட்டுச் சென்றான்.



சுமார் கால்மணிநேரத்திற்கெல்லாம் நீலகண்டன் ஒரு சந்தின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தபொழுது ஒரு வீட்டிற்கெதிரில் சில ஜனங்கள் கூடிக்கொண்டு அவர்களுடைய மத்தியில் காணப்பட்ட ஒரு 70 வயதுக் கிழவனை பரிஹஸிப்பதும் வாயில்வந்தபடியெல்லாம் திட்டுவதுமாயிருப்பதைக் கண்டு அக் கூட்டத்திற்குள் நுழைந்தான். அக் கிழவனைச் சுற்றி நாலைந்து குழந்தைகளும் இரு பெண்பிள்ளைகளும் நின்றுகொண்டு அழுதுகொண்டிருந்தனர். தரையில் சட்டிகளும் இதர சில சாமான்களும் அலங்கோலமாய்க் கிடந்தன. அவ் வீட்டிற்குள்ளிருந்து ஒருவன் மேலும் சில சாமான்களைக் கொண்டுவந்து அலக்ஷியமாய் அவைகளை வீதியிலெறிந்துகொண்டிருந்தான். அக் கிழவன், கண்களிலிருந்து நீர் வடிய தன் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவரை நோக்கி மிகவும் தாழ்மையுடன்,

“ஐயா! தயவுசெய்து இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்துக்கொள்ளும். அதற்குள் எப்படியாவது உமக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். நீர் இந்த இரவுவேளையில் இப்படிச்செய்தால் நாங்கள் என்ன செய்வோம்? இதோ இக் குழந்தைகள் சாப்பாடில்லாவிட்டாலும் படுக்கையில்லாவிட்டால் இந்தக் குளிரில் எவ்வளவு கஷ்டப்படும் என்பதை தயவுசெய்து யோஜியுங்கள்.” என்று கெஞ்சினான். ஆனால் அம் மற்றொருவர், சிறிதும் இரக்கமின்றி,

“அதைப்பற்றி நான் கவலைப்படவேண்டியது அவசியமில்லை, நானும் மூன்றுமாதகாலம் பொறுத்துவிட்டேன். இனிமேல் என்னால் முடியாது.” என்று கூறிவிட்டு அவ் வீட்டிற்குள்ளிருந்து சாமான்களை நாம் சொன்னவிதம் எடுத்துவந்து வீதியில் எறிந்துகொண்டிருந்தவனை நோக்கி “அடே! சீக்கிரம் கதவைப் பூட்டிக்கொண்டு வா.” என்று கட்டளையிட்டார்.

நிற்க, அக் கூட்டத்திற்குள் நுழைந்த நம் நீலகண்டன் அக் காட்சியைக் கண்டதும் கொஞ்சநேரம் திகைப்புற்று மரம்போல் நின்றான். அக் கிழவனுடைய பரிதாபகரமான நிலைமையையும் அவனைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்த அச் சிறு குழந்தைகள் அழுதுகொண்டிருந்ததையும் காணவே அவனுடைய கண்களில் நீர் தளும்பியது. பிறகு முன் சென்று அவ் வீட்டின் கதவைப் பூட்டும்படி கட்டளையிட்டவனை நோக்கி, மரியாதையுடன்,

"ஐயா! என்ன சமாசாரம்?" என்று வினவ அம் மற்றொருவர், மிகவும் இறுமாப்புடன்,

"அதை நீர் ஏன் கேட்கிறீர்?" என்று சீறினார். நீலகண்டன்,

"ஐயா! தயவுசெய்து கோபிக்கவேண்டாம். நீர் இதுவரையில் பேசியதிலிருந்து இக் கிழவன் உமக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இவனை எனக்கு நன்றாய்த் தெரியுமாகையால் உமக்கு இவன் கொடுக்கவேண்டிய பணத்தை நான் கொடுக்கத் தயார். ஆகவே, இவன் உமக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதை தயவுசெய்து சொல்லும். இதோ தருகிறேன்". என்று சொல்லவே அங்கிருந்த ஜனங்கள் எல்லோரும் வியப்புற்று நீலகண்டனை உற்றுநோக்கினார்கள். நிற்க, அவனைத் தனக்கு தெரியுமென்று நீலகண்டன் கூறியதைக் கேட்டதும், அக் கிழவன், திடுக்கிட்டு அவ் வாலிபனை அணுகி அவனுடைய முகத்தை உற்றுநோக்கியதும் மேலும் ஆச்சரியப்பட்டவனாய்,

"யாரது? வக்கீல் நாகராஜய்யர் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் வாத்தியாரல்லவோ நீங்கள்?" என்று வினவ நீலகண்டன், பிரியத்துடன்,

"ஆம்; என் முருகா! நீ இப்பொழுது செட்டியார் வீட்டில் வேலை செய்யவில்லையோ?" என்று விசாரித்தான். அக் கிழவன், விசனத்துடன்,



"ஸ்வாமி! அதை ஏன் கேட்கிறீர்கள்? அப் பாவி என்னைத் துறந்து ஆறுமாதகாலமாய்விட்டது. நான் படும் கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியும்." என்று கூறிவிட்டு சிறு குழந்தையைப்போல் அழவாரம்பித்தான். நீலகண்டன் அன்பொழுகும் சொற்களால் அவனை சமாதானம் செய்துவிட்டு மறுபடியும் அவ் வீட்டு சொந்தக்காரனை நோக்கி,

"ஐயா! உமக்கு இவன் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்?" என்று வினவினான். இதற்குள் அவ் வீட்டின் சொந்தக்காரர், அவ் வாலிபனுடைய உதார குணத்தையும் அவன் முகத்தில் காணப்பட்ட கம்பீரத்தையும் கண்டு, தான் அவனிடம் அவ்வளவு முரட்டுத்தனமாய்ப் பேசியதை நினைத்து வெட்கி மிகவும் பணிவுடன்,

"ஐயா! இவன் மூன்றுமாத வாடகை நாலரை ரூபாய் கொடுக்கவேண்டும். இன்னும் ரொக்கமாய் $2\frac{1}{2}$ ரூபாய் கொடுத்திருக்கிறேன்." என்று விடையளிக்கவே, நீலகண்டன், தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து,

"இந்தாரும். உம்முடைய ஏழு ரூபாய் போக பாக்கி மூன்று ரூபாயை இன்னும் இரண்டு மாத வாடகைக்கு வைத்துக்கொள்ளும்." என்று கூறியவண்ணம் அந்த நோட்டை அவ் வீட்டுச் சொந்தக்காரரிடம் கொடுத்தான். பிறகு அக் கிழவனை நோக்கி, "முருகா! உன்னுடைய சாமான்களை எல்லாம் உள்ளே எடுத்து வைத்துக்கொள்." என்றான்.

ஆனால் அக் கிழவன் தான் காண்பது ஸ்வப்பனமோ என்று நினைத்தவன்போல் அசைவின்றி சிலைபோல் நின்றுகொண்டிருந்தான்.

அதைக் கண்ட நீலகண்டன், அவன் சமீபத்தில் முகங்களில் நன்றியறிவு கூத்தாட நின்றுகொண்டிருந்த நாம் சொன்ன அவ்விரு பெண்பிள்ளைகளை நோக்கி,

"அம்மா! சாமான்களை எடுத்து உள்ளே வையுங்கள்." என்று கூறவே, அவர்கள் அக்காரியத்தைச் செய்ய ஆரம்பித்தார்கள். உடனே நீலகண்டன், மறுபடியும் அக் கிழவனை அணுகி அன்புடன்,

"முருகா! நீ முன்னொருசமயம் என்னுடன் பேசிய பொழுது நீ செட்டியார் வீட்டில் வேலைசெய்வதாய்ச் சொன்னாயே. உன்னை ஏன் அவர் எடுத்துவிட்டார்?" என்று வினவ, அக் கிழவன்,

"ஸ்வாமி! நான் கிட்டத்தட்ட 35 வருஷகாலம் அவ் வீட்டில் வேலைசெய்திருக்கிறேன். செட்டியாரை நானே வளர்த்தேன் என்று சொல்லலாம். ஒருசமயம் அவருடைய வலதுகால் கட்டைவிரலில் ஒரு சிறங்கு கிளம்பி டாக்டர் அவ்விரலையே வெட்டிவிட்டார். அப்பொழுது செட்டியாருக்கு 12 வயதிருக்கும். அந்தசமயம் அவருக்காக நான் பட்ட சிரமம் தெய்வத்துக்குத்தான் தெரியும். சுமார் பதினைந்து தினங்கள் என் வீட்டிற்கும் போகாமல் அவரைத் தூக்கிவைத்துக்கொண்டே நின்றேன். என்ன பிரயோஜனம்? எல்லாவற்றையும் மறந்துவிட்டார். இப்பொழுது அவருடைய சுபாவம் முழுமையும் அடியுடன் மாறியிருக்கிறது. ஏனென்றால் அவர் சிறு பிள்ளையாயிருந்த பொழுது என்னிடம் மிகவும் பிரியத்துடனிருந்தார். இப்பொழுது திரும்பிவந்தது முதற்கொண்டுதான் ஒருவரையும் லக்ஷியம்செய்யாமலிருக்கிறார்" என்று விடையளித்தான். இதைக் கேட்டதும் நீலகண்டன்,

"அவர் எங்கே போயிருந்தார்? எப்பொழுது திரும்பிவந்தார்?" என்று வினவ, முருகன்,

"அடாடா! அது ஒரு பெரிய கதை. இந்த செட்டியார் தன் பதினாறாவது வயதில் தன் தாதையிடம் கோபித்துக்கொண்டு சுமார் பத்துப் பன்னிரண்டுவருஷகாலம் போனவிடம் தெரியாமல் போய்விட்டார். இப்பொழுதுதான் திரும்பிவந்து இரண்டுவருஷகாலமிருக்கும்." என்று விடையளித்தான்.

---



188797 சென்னை-600 008

## அத்தியாயம் 8.

மேலும் ஒரு வாரகாலம் கழிந்தது. [illegible] காலை சுமார் எட்டுமணியிருக்கும்.

அச்சமயம் நம் நீலகண்டன் வழக்கம்போல் நாகராஜய்யருடைய பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் பொருட்டு அவ் வீட்டிற்குள் நுழைந்தபொழுது நாகராஜய்யர் தன் அத்தான் பிள்ளை சாம்பசிவனுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். நாகராஜய்யர் அவனைக் கண்டதும் தன்னிடம் வரும்படி ஜாடை செய்யவே நீலகண்டன் அவரை அணுகி மரியாதையுடன் நின்றான். நாகராஜய்யர் கொஞ்சநேரம் அவனை உற்றுநோக்கியவண்ணமிருந்தார். அதைக் கண்டதும் நீலகண்டனுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஏனென்றால் அவன் நாகராஜய்யருடைய பார்வையிலிருந்தே தான் ஏதோ குற்றம் செய்துவிட்டதாக அவர் நினைத்து அதைப்பற்றி தன்னுடன் பேசப் போகிறார் என்பதை அறிந்துகொண்டான். ஆனால் அச்சமயம் நாகராஜய்யரின் நண்பரொருவர் அங்கு வரவே அவர், நீலகண்டனை நோக்கி,

"சரி; உன் காரியத்தைப் பார்." என்று கூறவே, அவ் வாலிபன் குழம்பிய மனதுடன் தினந்தோறும் அவன் உட்கார்ந்து நாகராஜய்யருடைய பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் அறைக்குள் நுழைந்ததும் அங்கு அச் சிறுவனைக் காணாததால் சமீபத்திலிருந்த அவ் வீட்டு வேலைக்காரன் ஒருவனை அழைத்து அவன் எங்கென்று விசாரிக்க அவ் வேலைக்காரன் அச் சிறுவன் தன் தமக்கையுடன் மாடியிலிருப்பதாக விடையளித்தான். அச்சமயம் நீலகண்டன் கையில் ஒரு புஸ்தகமிருந்தது. அது அன்று சாரதம் தனக்கு வேண்டுமென்று அவனிடம் கூறிய "ஜோசப்சன் அல்லது ஒரு கொலையின் மர்மம்" என்ற நாவலேத்தவிரவேறல்ல. ஆகவே அவன் "சரி; மாடிக்குச் சென்று இப் புஸ்தகத்தை அவளிடம் கொடுத்துவிட்டு சந்

188797

தரத்தையும் அழைத்துவரலாம்." என்று தீர்மானித்தவனாய் சாரதத்தின் அறைக்குச் சென்றபொழுது அப் பெண் [illegible] தன் தம்பிக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் மேலும் வியப்புற்றான். ஆனாலும் தன் ஆச்சரியத்தை மறைத்துக்கொண்டு அவ்வறைக்கு வெளியிலிருந்துகொண்டே மரியாதையுடன்,

"அம்மா! இந்தா நீ கேட்ட புஸ்தகம்." என்று கூறவே சாரதம் தன் தலையைத் தூக்கிப் பார்த்தாள். நீலகண்டனைக் கண்டதும் திடீரென்று அவளுடைய முகத்தில் வெறுப்பும் கோபமும் ஜ்வலித்தன. அவள்,

"ஐயா! எனக்கு உம்முடைய புஸ்தகம் வேண்டாம். இன்னும் இனிமேல் நீர் என் தம்பிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியமில்லை. உடனே இவ்விடத்தைவிட்டுப் போய்விடும்." என்று கூறவே, நீலகண்டன் தன் தலைமேல் இடிவிழுந்தவன்போல் காணப்பட்டான். கொஞ்சநேரம் பேசவும் சக்தியற்று பிரமையுடன் அப்பெண்மணியின் முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். பிறகு தடுமாற்றத்துடன்,

"அம்மா! இதென்ன—? என்று அவன் மேலே பேசுமுன் சாரதம், அவனைத் தடுத்து,

"ஐயா! நீர் அனாவசியமாய் இங்கு தாமதித்தால் என்ன நடக்குமென்று தெரியாது. வீணில் அவமானப்படாமல் உடனே போய்விடும்." என்று மறுபடியும் கண்டிப்பாய்க் கூறினாள்.

ஆனால் நீலகண்டன் தன்னிடத்தைவிட்டு நகரவே இல்லை. அவன், மெச்சத்தக்க சாந்தத்துடன்,

"அம்மா! தயவுசெய்து நான் சொல்லுவதை செவிகொடுத்துக் கேட்கவேண்டும். ஒருக்கால் நான் என்னை அறியாமலே ஏதேனும் குற்றம் செய்திருக்கலாம். ஆகவே நான் செய்த குற்றமென்னவென்பதை நீ சொல்லுவாயாகில் நான் வாஸ்தவத்தில் அதைச் செய்தேனா அல்லது இவ்



வீட்டிலுள்ள நீங்கள் எல்லோரும் என்மீது வைத்திருக்கும் பிரியத்தையும் மரியாதையையும் கண்டு பொறாமையுள்ளவனாய் என்னை இவ் வீட்டிலிருந்து துரத்தும்பொருட்டு பிறர் செய்த சூழ்ச்சியா என்பதைக் கண்டுபிடிக்க சாத்தியமாகும். அப்படியே நான் குற்றம் செய்திருக்கும்பக்ஷத்தில் நான் மன்னிப்புக் கேட்கத் தயார்." என்று அவன் மேலே பேசுமுன் சாரதம், அவனை மறுபடியும் தடுத்து,

"நீர் செய்த குற்றத்தை தெய்வம்தான் மன்னிக்கவேண்டும். ஐயா! உம்போன்ற பாபிகளுடன் பெண்கள் பேசுவதே ஆபத்திற்கிடம். நீர் உடனே போகாவிட்டால் என் தந்தையைக் கூப்பிடுவேன்." என்றாள்.

இதைக் கேட்டதும் நீலகண்டன் திகைப்புற்று மறுபடியும் கொஞ்சநேரம் ஸ்தம்பித்து நின்றான். வரவர அவனுடைய முகம் தான் அனாவசியமாய் அவமானப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்ச்சியால் மாறியது. ஆனால் தன் கோபத்தைச் சிறிதும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் அமைதியுடன்,

"அம்மா! கேவலம் படிப்பற்ற பெண்கள் இவ்விதம் முன்பின் யோசிக்காமல் பதட்டமாய்ப் பேசினால் நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆனால் நற்குணங்களும் கல்வியும் நிறம்பிய நீ உன் வார்த்தைகளால் என் மனதை எவ்வளவுதூரம் புண்படுத்துகிறாய் என்பதை சிறிதும் உணராமல் பேசுவது வியக்கத்தக்கதே. நீ என்னைப் 'பாபி' என்று கூறியதிலிருந்து நான் சண்டாளர்களும் செய்யத் துணியாத ஒரு காரியத்தைச் செய்திருப்பதாக நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய் என்று வெளியாகிறது. அம்மா! இக் கலியில் மித்ரபேதம் செய்பவர்களுக்கே காலம். அப்படியே உனக்கு என்னுடன் பேசவும் என்னைப் பார்க்கவும் இஷ்டமில்லாவிட்டால் இனி உன் எதிரில் வருவதில்லை என்று இதோ என் பெற்றோர்களின்மேல் ஆணையாய் நான் சத்தியம்செய்துகொடுக்கிறேன். ஆனால் நான் போகுமுன் தயவுசெய்து நான் செய்த குற்றத்தை நீ சொல்லவேண்டும்." என்று அவன் பேசிக்கொண்டிருக்கையில் அவ்

வறையை நோக்கி யாரோ வரும் சப்தம் கேட்கவே திரும்பிப்பார்த்தான். மறுநிமிஷம் நாகராஜய்யர், சாம்பசிவன், கிட்டு இம் மூவரும் அங்கு வந்துசேர்ந்தனர். நாகராஜய்யர் வரும்பொழுதே ரௌத்திராகாரத்துடன் வந்தாராகையால் அவ்விதம் நீலகண்டன் தன் பெண்ணின் இஷ்டத்திற்கு விரோதமாய் அவளுடன் வாக்குவாதம் செய்துகொண்டிருந்ததை அறிந்ததும் அவருடைய கோபம் அதிகரித்தது. சாதாரணமாகவே உலகில் இருவருக்குள் மனஸ்தாபம் ஏற்படவேண்டுமானல் அச்சமயம் அவர்களில் ஒருவருடைய மனம் விபரீதமாய் மாறிவிடுமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே நாகராஜய்யராவது அவருடைய பெண் சாரதமாவது நீலகண்டன் வாஸ்தவத்தில் அவன் செய்ததாக தாங்கள் நம்பும் குற்றத்தை அவன் செய்திருப்பானா என்பதை யோசிக்க மறந்துவிட்டனர். நாகராஜய்யருடைய கோபத்தைக் கண்டதும் நீலகண்டன் முதலில் திடுக்கிட்டான். ஆனாலும் தான் பயப்படவேண்டியது அனாவசியமென்று நினைத்தவன்போல் மிகவும் கம்பீரத்துடன் நின்றான். அதைக் கண்ட நாகராஜய்யர், அவன் குற்றத்தையும் செய்துவிட்டு தைரியத்துடனும் நிற்பதாக நினைத்து மேலும் கோபங்கொண்டு,

"அடே! உனக்கு இங்கு என்ன வேலை?" என்று வினவினார்.

நீலகண்டன் இக்கேள்விக்கு என்ன விடையளிப்பது என்று புரியாமல் தடுமாற்றத்துடன் தரையை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். அவன் அவ்விதம் மௌனம் சாதிப்பதைக் கண்டதும் நாகராஜய்யர், அவன் வாஸ்தவத்தில் குற்றவாளியே என்று நினைத்தவர்போல் அதிகார த்வனியில்,

"சரி; உடனே வெளியே போ. இனிமேல் இவ் வீட்டிற்குள் நுழையாதே." என்றார்.

இதைக் கேட்டதும் நீலகண்டன் மறுபடியும் திடுக்கிட்டான். அவன் பலவிதங்களில் யோஜித்தும் தான்



செய்த குற்றம் என்ன என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஒருதரம் தன் சிரத்தைத் தூக்கி நாகராஜய்யருடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான். பிறகு மிகவும் சாந்தமாய் மரியாதையுடன்,

"ஐயா! இப்பொழுது நான் உங்களுடன் பேசுவதால் உங்களுடைய கோபம் மேலும் அதிகரிக்குமென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் பிறகு உங்களுடன் பேச சந்தர்ப்பம் கிடைக்காதாகையால் நான் சொல்லுவதை தயவு செய்து பொருமையுடன் கேட்குமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நீங்கள் என்னை உங்களுடைய வீட்டிலிருந்து போகச் சொல்லிவிட்டீர்களென்றும் அதனாலாய் எனக்கு இதுவரையில் வந்துகொண்டிருந்த 20 ரூ. வருமானம் போய்விட்டதேயென்றும் நான் கவலைப்படவில்லை. ஆனால் இதுகாறும் என்னை உங்களுடைய புதல்வனென்றே மதித்து அதற்கேற்ற ப்ரியத்துடனும் மரியாதையுடனும் நடத்திவந்த உங்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் நான் செய்ததென்னவென்பது எனக்குத் தெரியாததால் என் மனம் மிகவும் குழம்புகிறது. அதுவுமன்றி நான் இதுவரையில் எனக்குத் தெரிந்து யாதொரு குற்றத்தையும் செய்தவனல்ல. சற்றுநேரத்திற்குமுன் உங்களுடைய பெண் நான் செய்த குற்றத்தைத் தெய்வம்தான் மன்னிக்கவேண்டுமென்று கூறினாள். ஆகவே உங்களுக்கு என்னை மன்னிக்க இஷ்டமில்லாவிட்டாலும் தயவுசெய்து நான் செய்த குற்றமென்னவென்பதைச் சொல்லும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான்.

ஆனால் நாகராஜய்யருடைய கோபமும் வெறுப்பும் வரவர அதிகரித்துக்கொண்டுவந்ததேயொழிய சற்றும் குறையவில்லை. அவர், கண்களில் தீப்பறக்க,

"அடே! நீ என்னை ஏமாற்றுவது முடியாத காரியம். மரியாதையுடன் வெளியே போய்விடு. இல்லாவிட்டால் என் வேலைக்காரனை யழைத்து உன்னை—" என்று அவர் மேலே பேசுமுன் நீலகண்டன்,

"ஐயா! நீர் உம்முடைய வேலைக்காரனை யழைக்கும் சிரமத்தை எடுத்துக்கொள்ளவேண்டாம். நான் இதோ போய்விடுகிறேன்." என்று கூறியவண்ணம் நாகராஜய்யரை மரியாதையுடன் நமஸ்கரித்துவிட்டு மடமடவென்று போய்விட்டான். அச்சமயமிருந்த அவனுடைய மனோ நிலைமையை வர்ணிப்பது அசாத்தியம்.

நீலகண்டன் அவ் வீட்டைவிட்டு வெளியே வந்து கொஞ்சதூரம் சென்றதும் பின்னால் யாரோ தன்னைத் தன் பெயரைச் சொல்லியழைக்கும் சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தபொழுது அது சாரதத்தின் தமயன் கிட்டுவென்பதைக் கண்டதும் ஆச்சரியப்பட்டவனாய் அப்படியே நின்றான். சற்றுநேரத்திற்கெல்லாம் அவனிடம் வந்த கிட்டு,

"நீலகண்டா! இன்று என் வீட்டில் நடந்த விஷயத்தை நினைக்க நான் மிகவும் விசனப்படுகிறேன்." என்றான்.

கிட்டுவிடம் சில கெட்ட வழக்கங்களுண்டென்பதை நீலகண்டன் அறிந்தவனே. ஆனால் அவன் தன்னிடம் மிகவும் மரியாதையுடனும் பிரியத்துடனுமிருக்கிறானென்பதை உணர்ந்து,

"உனக்கு என்னிடமுள்ள விசுவாசத்தைக் கண்டு மிகவும் சந்தோஷிக்கிறேன். இன்று நடந்த விஷயம் எனக்கு ஸ்வப்பனம்போலிருக்கிறது." என்றான்.

கிட்டு:—இது முழுமையும் இந்த சாம்பசிவனுடைய விஷமமென்பது நிச்சயம். நான் முதலில் அவனுடைய பேச்சையும் அபிநயத்தையும் கண்டு மயங்கினேன். உன்னை விவாஹம் செய்துகொள்ள என் தங்கை சாரதம் பிரியப்படுகிறாளென்பதை அறிந்ததும் உங்களிருவரையும் பிரிக்கும்பொருட்டு அவனே ஏதோ தந்திரம் செய்திருக்கிறான். நேற்று இரவு அவன் நாகராஜய்யருடன் சுமார் 2 மணி சாவகாசம் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். நாகராஜய்யருக்குப் பிறர் சொல்லுவதை உடனே நம்பும் வழக்கமும் முன்



கோபமும் கொஞ்சமுண்டு. ஆனால் அவன் உன்னையும் என் தங்கையையும் எப்படிப் பிரித்தானென்பது எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் சாரதம் முன்பின் யோசிக்காமல் ஒரு காரியத்தையும் செய்பவளல்ல. அதுவும் உன்னையும் அவளையும் பிரிப்பது லேசான காரியமல்ல. இருக்கட்டும்; நீ எதற்கும் கவலைப்படவேண்டாம். நான் தந்திரமாய் என் மனைவியைக்கொண்டு சாரதத்தின் மனதிலிருப்பதை அறிந்துவந்து உன்னிடம் சொல்லுகிறேன்.

நீல:—கிட்டு! இந்த உதவிமட்டும் நீ எனக்குச் செய்வாயாகில் நான் உன்னை ஒருநாளும் மறக்கமாட்டேன். இப்பவும் இவ் விஷயத்தை அறிந்து அதில் நான் நிரபராதியென்று ரூபித்துக்கொள்ள இவ்வளவு ஆவலுடனிருப்பதற்குக் காரணம் நான் இவ்விதம் உன் வீட்டிலிருந்து துரத்தப்பட்டேனென்பது வெளியாகுமானால் அதன் பலனாய் எனக்கு வரக்கூடிய அவமானத்தையும் இதர கஷ்டங்களையும் என்னால் பொருக்கமுடியாதென்பதேயொழிய வேறல்ல.

கிட்டு:—வாஸ்தவமே. சரி; இன்று மாலை நான் உன்னை எங்கு சந்திக்கமுடியும்?

நீல:—5 மணியிலிருந்து 8 மணிவரையில் நான் இவ்வூர் காங்கிரஸ் ஆபீஸிலிருப்பேன்.

"சரி; நான் 6 மணிக்குள் அங்கு வருகிறேன்." என்று சொல்லிவிட்டு கிட்டு நீலகண்டனிடம் விடைபெற்றுக்கொண்டு மறுபடியும் தன் வீட்டை நோக்கி நடந்தான். கடைசியில் அவன் தன் வீட்டின் சமீபம் வந்தபொழுது அங்கு அவனுடைய நண்பன் ஒருவன் அவனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். இங்கு அந்த நண்பனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவது அதிகமாகாது. தம்புசாமி என்ற பெயர்கொண்ட அவன் அவ்வூரிலுள்ள தனவந்தர்களுடைய பிள்ளைகளுக்கு சூது குடி நாஸி இத்தகைய துர்க்கிருத்தியங்களுக்கு சாதக

மாயிருந்து அதனால் பிழைப்பவன். அவனுடைய வலையில் ஒருதரம் மாட்டிக்கொண்ட வாலிபர்கள் அதிலிருந்து தப்புவது லேசல்ல. ஆகவே அவன் ரங்காட்டத்தில் மிகவும் பிரியமுள்ள நம் கிட்டுவின் நண்பனாயிருந்தது வியக்கத்தக்கதல்ல. கிட்டுவைக் கண்டதும் அவன், அவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் செய்யும் அபிநயங்களைச் செய்துவிட்டு,

"எனக்கு உங்களுடன் கொஞ்சம் பேசவேண்டும்." என்று கூறவே, கிட்டு, அவனுடன்,

"ஏன்? என்ன விசேஷம்?" என்று வினவினான்.

தம்பு:—(சமீபத்திலிருந்த பாலகிருஷ்ண செட்டியாருடைய வீட்டைக் காண்பித்து) ஆமாம்; நீங்கள் அவ் வீட்டுப் பரிசாரகன் கிருஷ்ணனுடன் ரங்காடும் வழக்கமுண்டா?

கிட்டு:—உண்டு. அது உனக்கெப்படித் தெரியும்?

தம்பு:—நேற்று அவன் தன் தோழன் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அதிலிருந்து நீங்கள் தினந்தோறும் அவனுடன் இரவில் ரங்காடுவதாகவும் அதில் ஒவ்வொருநாளும் நீங்கள் 10 ரூபாய்க்குமேல் தோற்பதாகவும் அப்படி இதுவரையில் நீங்கள் தோற்ற பணத்திற்காக 500 ரூபாய்க்கு ஒரு பிராமிஸரி நோட்டு அவனுக்கு எழுதிக்கொடுத்திருப்பதாகவும் தெரிந்துகொண்டேன். நான் சொல்லுவது வாஸ்தவமா?

கிட்டு:—(தடுமாற்றத்துடன்) வாஸ்தவம். நேற்றுகூட அவன் அப்பணத்திற்காக என்னை மிகவும் தொந்தரவு செய்தான். இப்பொழுது என்னிடம் பணமில்லை. இது வெளியாகுமானால் என் சிறியதகப்பன் என்னை வீட்டிலிருந்து அடித்துத் துறத்திவிடுவார். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

தம்பு:—ஸ்வாமி! நீங்கள் அவனுக்கு அப் பணத்தைக் கொடுத்தால் உங்களைப்போன்ற பைத்தியம் ஒருவருமில்லை.



கிட்டு:—(வியப்புற்று) ஏன்? நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே.

தம்பு:—ஸ்வாமி! ஆதியிலிருந்தே அவன் உங்களை ஏமாற்றி வருகிறான். அவன் நியாயமாய் இவ்வளவு பணமும் ஜெயிக்கவில்லை. அதிருக்கட்டும்; ஆடுவதற்காக தினம் சீட்டுக்கட்டு உங்களில் யார் வாங்கிவருவது வழக்கம்?

கிட்டு:—அவன்தான் வாங்கிவருகிறான்.

தம்பு:—பேஷ்! ஐயரே! உங்களுக்கு ரங்காடவேண்டுமென்ற ஆசைமட்டும் இருக்கிறதேயொழிய அதில் நடக்கும் சூதுகளும் அதற்குவேண்டிய தந்திரமும் கொஞ்சமும் தெரியவில்லை. ஸ்வாமி! நீங்கள் இன்று இரவு ஆடும் சீட்டுக்கட்டை நன்றாய்க் கவனித்துப் பாரும். அதில் நல்ல சீட்டுக்களிலெல்லாம் அடையாளமிருக்கும். நேற்று அவன் பேசியதிலிருந்தே இந்த விஷமம் செய்கிறானென்பது நிச்சயம்.

இதைக் கேட்டதும் கிட்டுவுக்குண்டான கோபத்திற்கும் ஆச்சரியத்திற்குமளவில்லை. அவன்,

"சரிதான்; இது இப்படித்தானிருக்கவேண்டும். இன்று நாங்கள் ஆடும் சீட்டுக்கட்டை நான் கவனிக்கிறேன். நீ சொல்லுவது வாஸ்தவமாயிருக்கும்பக்ஷத்தில் அவனை லேசில் விடமாட்டேன். சரி; எனக்கு ஆபீஸுக்குப் போக நாழியாய்விட்டது. நீ போய்விட்டுவா." என்று கூறவே, தம்புசாமி போய்விட்டான்.

ஏற்கனவே மணி 10க்குமேலாய்விட்டதால் கிட்டு அவசரத்துடன் தன் வீட்டிற்குள் சென்று தன் ஸ்நான போஜனாதிகளை முடித்துக்கொண்டு ஆபீஸிற்குப் புறப்பட்டான். ஆனால் வெளியே வந்ததும் தான் தன் மனைவியைக்கொண்டு சாரதத்தின் மனதிலிருப்பதை யறிந்து நீலகண்டனுக்குக் கூறுவதாக வாக்களித்தது ஞாபகம் வரவே மறுபடியும் உள்ளே சென்று வழியிலிருந்த சமையற்கார

அம்மாள் சுப்புப்பாட்டியிடம் தன் மனைவியை தன் அறைக்கு அனுப்பும்படி கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றான். சற்றுநேரத்திற்கெல்லாம் பார்வதி அங்கு வரவே, அவளை நோக்கி,

“ஏண்டி! இப்படி சாரதம் திடீரென்று நீலகண்டனிடம் வெறுப்படைந்ததற்குக் காரணமென்ன?” என்று வினவினான். அப் பெண்மணி,

“எனக்குத் தெரியாது. ஏன்?” என்று கேட்க கிட்டு,

“சரி; எப்படியாவது நீ அவளுடன் தந்திரமாய்ப் பேசி என்ன விஷயமென்பதைத் தெரிந்துகொண்டு நான் ஆபீஸிலிருந்து வந்ததும் என்னிடம் சொல்லு.” என்றான். பார்வதி ஆகட்டுமென்று விடையளிக்கவே கிட்டு மறுபடியும் வெளியே சென்றான்.

அன்று பிற்பகல் 2 மணிவரையில் பார்வதி எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் சாரதத்துடன் தனிமையில் பேச சந்தர்ப்பமே ஏற்படவில்லை. பிறகு இருவரும் சாரதத்தின் அறைக்குச் சென்று பேசவாரம்பித்தார்கள். பார்வதி, நயமாக,

சாரதம்! சுந்தரத்தின் வாத்தியார் (நீலகண்டன்) செய்ததென்ன? இவ்விதம் திடீரென்று—” என்று அவள் மேலே பேசுமுன் சாரதம், வெறுப்புடன்,

“மன்னி! தயவுசெய்து அச் சண்டாளனைப்பற்றி என்னிடம் பேசாதே.” என்றாள்.

பார்வதி:—அப்படி அவர் என்ன செய்துவிட்டார்?

சாரதம்:—என்ன செய்தாரா? அப் பாபி செய்த காரியத்தை நினைக்க என் உடல் நடுங்குகிறது. மன்னி! இனிமேல் உலகத்தில் நான் யாரையும் நம்பமாட்டேன்.

பார்வதி:—விஷயத்தைச் சொல்லாமல் என்னமோ கதை பண்ணுகிறாயே. அவர் செய்ததென்ன?

சாரதம்:—சொல்லுகிறேன் கேள். நேற்று எனக்கு ஒரு கடிதம் வந்தது. இதோ காண்பிக்கிறேன்; பார்.



(என்று கூறிவிட்டு தன்னிடத்தைவிட்டெழுந்து சென்று பக்கத்திலிருந்த ஒரு பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துவந்து பார்வதியிடம் கொடுத்தாள்.)

அதில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:—

“நீ நீலகண்டன் என்ற ஒருவனைக் காதலிக்கிறாயென்பது எனக்குத் தெரியும். அவன் வாஸ்தவத்தில் எப்பேர்ப்பட்டவனென்பதை அறிய உனக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் இன்று இரவு 7 மணிக்கு இவ்வூர் தெற்குவெளிவீதி 8 நம்பர் வீட்டிற்கு வந்து என்னைப் பார்க்கவும்.”

இக் கடிதத்தை வாசித்ததும் பார்வதி கொஞ்சநேரம் திகைப்புற்று மௌனமாயிருந்தாள். பிறகு அடக்க இயலாத ஆவலுடன்,

“சரி; நீ மேலே செய்த காரியத்தை விபரமாய்ச் சொல்.” என்றாள். சாரதம், தாழ்ந்த குரலில்,

“இக் கடிதத்தை வாசித்ததும் முதலில் எனக்கொன்றும் புரியவில்லை. ஒருக்கால் இதில் ஏதேனும் சூதிருக்குமோவென்று சந்தேகப்பட்டேன். ஆனால் முடிவில் அவ்வீட்டிற்குப் போவதென்று தீர்மானித்தேன். 7 மணி சுமாருக்கு நான் அவ்வீட்டிற்குச் சென்றபொழுது அதன் திண்ணையில் கிட்டத்தட்ட 18 வயதுள்ள ஒரு பெண் ஆவலுடன் என்னை எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். அவள் என்னைப் பார்த்ததும் நான்தான் சாரதமென்பதைக் கேட்டறிந்துகொண்டு என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். பிறகு தான் ஒரு பிராமணக் கைம்பெண் என்றும் இவ்வூரில் சில பெரியமனிதர் வீட்டுப் பெண்களுக்குப் படிப்பும் பாட்டும் சொல்லிக்கொடுத்துத் தான் பிழைப்பதாகவும் கூறினாள். அவளுடைய பேச்சிலிருந்தே அவள் நன்றாய்ப் படித்தவளென்று தோன்றுகிறது. அவளுக்கு வேறு யாரும் உறவினரில்லையாம். அவ்வீட்டில் அவள் தனிமையிலிருக்கிறாள். உனக்கு ஸந்தேகமிருந்தால் நீயும் அவளை நேரில் பார்க்கமுடியும். இப் பாபி (நீலகண்டன்) கைம்பெண்கள் மறுபடியும் விவாஹம் செய்துகொள்ளவேண்டி

188797



ய[illegible] மிகவும் அவசியமென்று [illegible]ழுதியிருக்கும் புஸ்தகங்களை நா[illegible] வாசித்திருக்கிறோம். அப் புஸ்தகங்களை அவளும் வாசித்திருக்கிறாள். இன்னும் அவனுடைய வாக் சாதுர்யத்தையும் வேஷத்தையும் கண்டு மயங்கி அவனுடைய வலையில் மாட்டிக்கொண்டாள். பாவம்! அவள் இப்பொழுது 6 மாதம் கர்ப்பம். இச் சண்டாளன் ஒருமாதகாலமாக அவளைப் பார்க்கவேயில்லையாம். பிறகு ஐந்து ஆறு தினங்களுக்குமுன் அவளிடம் சென்று தான் என்னை விவாஹம் செய்துகொள்ளப்போவதாகவும் வேண்டுமானால் அவளுக்கு மாதம் 20 ரு. தான் கொடுப்பதாகவும் சொன்னானாம். வண்டி! என்ன கல்நெஞ்சு பார்த்தாயா? அப் பெண் என்ன செய்வதென்று புரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறாள். அவள் மிகவும் மானியென்று தோன்றுகிறது. அவளுடைய நிலைமையை நினைக்க என் மனம் பதறுகிறது." என்றான்.

இதைக் கேட்டதும் பார்வதி மேலும் வியப்பும் திகைப்புமுற்று கொஞ்சநேரம் வாயைத் திறந்து பேசவும் சக்தியற்றவள்போல் சாரதத்தின் முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். பிறகு,

"சாரதம்! இது நம்பத்தக்கதாயில்லையே." என்றாள். சாரதம்,

"இருக்கலாம்; ஆனால் இதை நாம் எப்படி நம்பாமலிருக்கமுடியும். அப் பெண்ணை நான் நேரில் பார்த்திருக்கிறேனே. ஒருவள் அனாவசியமாய் தன் கற்பை இழந்துவிட்டேனென்று கூறுவாளா? மன்னி!—" என்று சாரதம் பேசிக்கொண்டிருக்கையில் அவளுடைய தாயார் அங்கு வரவே அப் பேச்சை நிறுத்திவிட்டாள்.

ஆகவே அன்று மாலை $5\frac{1}{4}$ மணிக்கு கிட்டு தன் ஆபீஸிலிருந்து திரும்பிவந்ததும், பார்வதி சாரதம் கூறியதை அவனிடம் தெரிவிக்கவே, அவனுக்குண்டான ஆச்சர்யம் அளவற்றது. அவன் சாரதம் கண்டு பேசிய அப் பெண்ணின் வீட்டு விலாசத்தை ஜாக்கிரதையுடன் ஒரு கடிதத்தில்